வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 22.06.2024 சனிக்கிழமை இதழ் : 174 பக்கங்கள் : 12

# இந்தியா இலங்கையின் நம்பிக்கையான நண்பன்

## பயணத்தை முடித்து திரும்பிய ஜெய்சங்கர்



புதுடில்லி, ஜூன் 22

இந்தியா எதிர்காலத்திலும் இலங்கையின் நம்பிக்கையான நண்பனாக செயற்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கை விஜயத்தை நிறைவு செய்து இந்தியா திரும்பியதன் பின்னர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் அவர் இதனை பதிவிட்டுள்ளார்.

இலங்கைக்கு ஒருநாள் உத்தியோகபூர்வ விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் நாட்டிலிருந்து நேற்று முன்தினம் மாலை புறப்பட்டுச் சென்றார்.

தனது பதவிக்காலத்தின் முதலாவது பயணமான இலங்கை விஜயம்

11

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போடவே முடியாது!

## மகிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன் 22

ஜனாதிபதித் தேர்தலை செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதிக்கும் இடை யில் கட்டாயமாக நடத்த வேண்டும் என தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் மகிந்த தேசப்பிரிய இவ்வாறு தெரிவித்தார்.

செப்ரெம்பர் 20ஆம் திகதியிலிருந்து ஒக்ரோபர் 17ஆம் திகதிக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும்.

இந்த தேர்தலை பிற்போட முடியும் என எவரேனும் கூறினால், அவர்களின் மூளையை பரிசோதனைக் குட்படுத்தி பார்க்கவேண்டும். எக்காரணத்தினாலும் தேர்தலைப் பிற்போடுவது என்பது தவறு.

11

# ராஜபக்ஷக்கள் இல்லாத கூட்டணியா? ரணிலின் நடவடிக்கைக்கு பஸில் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 22

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் கூட்டணி அமைக்க தயாராகும் ராஜபக்சக்கள் இல்லாத புதிய அரசியல் கட்சி தொடர்பில் பொது ஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ச அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுடனான விசேட சந்திப்பின் போதே இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் ராஜபக்ஷக்கள் இல்லாத மொட்டுக்கட்சியினர் சிலர் கூட்டணி அமைப்பது தொடர்பில் பிரசன்ன ரணதுங்க மற்றும் ரணில் விக்ரமசிங்க இடையே விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

குறித்த கூட்டணி சார்ந்த எந்த ஒரு நிகழ்வுகளிலும் ராஜபக்சக்களை இணைத்துக் கொள்வதில்லை என பிரசன்ன ரணதுங்க, ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துரைத்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில்

11

# மன்னார் பிரதான பாலத்தடியில் சோதனை முகாம் அகற்றப்பட்டது

மன்னார், ஜூன் 22

மன்னார் மாவட்டத்தில் நீண்டகாலமாக மக்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்கிய பிரதான சோதனை சாவடி மற்றும் வீதி தடைகள் நேற்று வெள்ளிக்கிழமை அகற்றப்பட்டதுடன் சோதனை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

பல வருடங்களாக குறித்த சோதனை

11



# நெடுந்தீவில் கொலை செய்யப்பட்ட இளைஞருக்கு நீதி கோரி கவனவீர்ப்பு

## பொலிஸ் நிலையம் முன்பாக நடந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 22

நெடுந்தீவு பகுதியில் கொலை செய்யப்பட்ட இளைஞருக்கு நீதி வேண்டி நெடுந்தீவு பொலிஸ் நிலையம் முன் மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை நெடுந்தீவு

11



# ஜப்பான் போர்க்கப்பல் கொழும்பில்

கொழும்பு, ஜூன் 22

ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படையின் நாசகாரி கப்பல் ஒன்று, கொழும்பு துறை முகத்தில் நங்கூரமிட்டுள்ளது.

ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படையின் சமிதாரே என்ற இந்த

11

# சரத் பொன்சேகா - சஜித் அதி உச்சமான முறுகல்!

கொழும்பு, ஜூன் 22

பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவால் ஐக்கிய மக்கள் சக்தியில் தொடர்ந்தும் இருக்க முடியாவிட்டால், உடனடியாக கட்சியை விட்டு வெளியேறுமாறு சஜித் தரப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

பாராளுமன்றில் சரத் பொன்சேகா முன்வைத்த கருத்துக்கள் தொடர்பில் விளக்கமளிக்கும்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே மேற்கண்டவாறு

11

# இந்தியாவை மீறி எதுவும் அசையாது

## கூறுகிறார் வினோ எம்.பி.

கொழும்பு, ஜூன் 22

“இந்தியாவை மீறி எந்தவொரு நாடும் இலங்கைப் பிரச்னையில், தமிழ் மக்களின் இனப்பிரச்சினையில் தலையிட முடியாது.

அவ்வாறு தலையிடுவதானால் அது இந்தியாவுக்கு பின்னர்தான், இந்தியாவுக்குத்தான் முதலிடம். இந்தி யாவை மீறி இங்கு எதுவுமே

11

# இலங்கைப் பொலிஸாருக்கு இந்தியாவில் சிறப்புப் பயிற்சி

கொழும்பு, ஜூன்

இலங்கையின் 23 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று, இந்தியாவில் ஜூன் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட இரண்டு வார பயிற்சி வகுப்பில் பங்கேற்றுள்ளது என இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின்

11

# மன்னார் மீனவர்களை சந்திக்கவேண்டும் ரணில்!

மன்னார், ஜூன் 22

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னாருக்கு வருகைதந்து கடற்றொழிலாளர்களின் கோரிக்கையை கேட்டறிந்து வாக்குகளை கோரவேண்டும் என வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய வருகை நீண்ட புரையோடிப்போன ஒரு விடயமாக உள்ளது. கடந்த வாரம் மன்னாருக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதியை சந்திப்பதற்கு

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தலில் யார் யாருடன் சேர்வார்கள், யார் யாருடைய காலை வாருவார்கள் என்பதெல்லாம் விரைவில் தெரிய வந்துவிடும். இதுகாலவரை மகிந்த ராஜபக்ஷவின் வேட்பாளராகவே ரணில் போட்டியிடுவார் என்று நம்பப்பட்டுவந்த நிலையில் இப்போது அவர் உதிரிகளாக உள்ள பலருடனும் சேர்ந்து கட்சி சார்பான வேட்பாளராக இல்லாமல் பொதுவேட்பாளராகவே களம் இறங்கவிருக்கிறார் என்பது உறுதியாகியிருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்கவையும் சஜித் பிரேமதாசாவையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடு பட்டிருந்த தரப்பினர், மகிந்த தரப்பை தனித்து களம் இறங்குமாறும், அவ்வாறு இறங்கினால் மட்டுமே, பெரும்பான்மையான சிங்கள மக்களின் ஆதரவை பெறமுடியும் என்பதோடு, சிறுபான்மை கட்சிகளின் ஆதரவையும் பெறமுடியும் என்றும் ஆலோசனை சொல்லியிருக்கின்றனராம்.

ரணில் - சஜித் இணைப்பு முயற்சிக்கும் மகிந்தவின் ஆதரவு பெரும்தடையாக இருந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம். மகிந்தவின் ஆதரவு இல்லாவிட்டாலும் கூட, மகிந்தவுடன் இருந்த பலர், அனேகமாக தனக்கென தனியான வாக்குவங்கியுடன் இருப்பவர்கள் எல்லோருமே ரணிலின் பக்கத்தில் தான் இப்போது இருக்கின்றனர் என்பதால், மகிந்த தனித்து வேட்பாளரை நிறுத்துவது ரணிலுக்கு எந்தவகையிலும் பாதிப்பை ஏற்படுத்தாது என்று கணக்கிடுகின்றனராம். மகிந்தவிடம் எஞ்சியிருக்கும் ஒருசில லட்சம் வாக்குகளும், கடும் சிங்கள பௌத்த வாக்குகள் என்பதால் அவை ரணிலுக்கு கிடைக்க சந்தர்ப்பம் இல்லை என்பதால், அவர்கள் வேட்பாளரை களம் இறக்காமல் விட்டால் அவை ஜேவிபிக்கு - அதாவது தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் அநுரவிற்கு சென்றுவிடலாம் என்ற கருத்தும் சொல்லப்படுகின்றது.

இதனால், அவர்கள் தனித்து போகும் முடிவை எடுத்துவிட்டனர் என்கின்றன பெரமுன வட்டாரங்கள். அனேகமாக இரண்டு வாரங்களில் அவர்களின் வேட்பாளர் அறிவிக்கப்படலாம்.

ஒரு காலத்தில் இந்தியா என்றால் அது தமிழர்களுக்கு ஆதரவான நாடு என்ற எண்ணம் மாத்திரமல்ல, அச்சமும் சிங்கள மக்கள் மத்தியில் நிலவியது. அதனாலேயே இந்திய எதிர்ப்பு அரசியலை பலரும் முன்னெடுத்திருந்தனர். ஆனால் அந்த நிலமை இப்போது தலைகீழாக மாறிவிட்டது என்கிறார் தெற்கின் மூத்த ஊடகவியலாளர் ஒருவர்.

இந்த தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் யார் வெற்றிபெறவேண்டும் என்று இந்தியா விரும்புகின்றதோ அது பகிரங்கமாக தெரியவரும் பட்சத்தில், அந்த வேட்பாளருக்கு பெரும்பான்மையான சிங்கள மக்கள் வாக்களிக்க சந்தர்ப்பம் இருக்கின்றது என்றும், அதுவே தேர்தல் முடிவுகளை பெரும்பாலும் தீர்மானிக்கும் என்றும் அவர் கூறியதைக் கேட்டபோது ஆச்சரியமாக இருந்தது.

சில மாதங்களுக்கு முன்னர், தமிழ் தலைவர் ஒருவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோது அவர் கூறிய செய்தி ஒன்றும் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

கருத்துக்கணிப்புக்களில் தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸநாயக்காவே முன்னிலையில் இருப்பதாக செய்திகள் வருகின்றனவே? அது உண்மையான தகவல்களா என்று நமது தலைவர் ரணிலிடம் கேட்டபோது, வழக்கம்போலவே கொடுப்புக்குள் சிரித்தவாறே அவர் கூறினாராம்:

"நாங்கள்தான் இன்னமும் பிரசாரத்தையே தொடங்கவில்லையே? பிரசாரம் செய்பவர்களிடையே கருத்துக்கணிப்பில் போட்டிகள் இருக்கத்தானே செய்யும்" என்று.

அவர் கூறியது, பிரசாரம் செய்பவர்கள் இடையே தான் கருத்துக்கணிப்புக்களிலும் போட்டி இருக்கும் என்பது, தான் பிரசாரம் செய்த பின்னர் அது எப்படி மாறுகின்றது பாருங்கள் என்பதே.

அன்று அவர் கூறியது போலவே, இன்னமும் தான் போட்டியிடப்போகின்றேன் என்பதைக் கூட உத்தியோகபூர்வமாக அறிவிக்காமல் இருந்துகொண்டே, தனது முக்கிய எதிர்வேட்பாளர்களை பலவீனப்படுத்தும் முயற்சியை கனகச்சிதமாக செய்து வருகிறார் ரணில். இதனை பல உதாரணங்களுடன் விளக்கிய அந்த மூத்த தெற்கின் ஊடகர், அவர் இரண்டு வேட்பாளர்களை நோக்கியும் இவ்வாறு தாக்குதல் நடத்தி வருவதும், ரணில் - சஜித் இணைப்புக்கு முயன்றுவருபவர்களின் முயற்சிக்கு இடையூறாகி வருகின்றதாம்.

இந்த இணைப்பு முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு, சஜித் முக்கியமாக சொன்னது: "தனது அணியிலிருந்து ஆட்களைப் பிடிக்கின்ற வேலையை அவர் முதலில் நிறுத்தவேண்டும்" என்று. ஆனால் சஜித்துடன் சேர்வதைவிட அவருடன் இருப்பவர்களில் சிலரை தன் பக்கம் எடுத்துவிட்டால் போதும் என்று நம்பும் ரணில் விக்கிரமசிங்க, தொடர்ந்து அந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பதும் இருவர் தரப்பையும் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களை சினமடைய வைத்திருக்கின்றது.

போகிற போக்கைப் பார்த்தால் மும்முனைப்போட்டி தவிர்க்க முடியாதது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். மகிந்த தரப்பு போட்டியில் இல்லாவிட்டாலும், ரணில் வந்தால் சந்தோசம், சஜித் வந்தாலும் பரவாயில்லை. ஆனால் சிவப்புச்சட்டைக்காரர்கள் வந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கும் ராஜபக்ஷ தரப்பினர், தமது வேட்பாளருக்கு ஆதரவாக இல்லாமல் சிவப்பு சட்டைக்காரர்களுக்கு எதிராகவே கடும் பிரசாரத்தை தொடங்க தயாராகி வருகின்றனராம்.

- ஊர்க்குருவி.

## தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரைக்கு எதிராக போராட்டம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 22

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிரான தொடர் போராட்டம் நேற்று ஆரம்பமானது.

பொது மக்களது காணிகள் அபகரிக்கப்பட்டு, உரிய அனுமதி பெறப்படாமலேயே இந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, இவ்விகாரையை அகற்றுமாறு கோரி ஒரு வருட காலமாக தொடர் போராட்டம் இடம்பெற்று வருகிறது.

பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இந்த விகாரையில் வழிபாடுகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் அதற்கு எதிர்ப்பை வெளிக்காட்டும் விதமாக இந்த போராட்டம் இடம்பெறுகிறது.

இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

## ஜனாதிபதித் தேர்தர்லுக்கான கண்காணிப்பில் 8000 பேர்!

கொழும்பு,ஜூன்22

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக 8,000 உள்ளூர் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பைச் சேர்ந்த கணக்கெடுப்பு குழுக்களை கொண்டு வர நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முன் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொது நலவாய நாடுகளின் சர்வதேச தேர்தல் கண்காணிப்பு குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## பெரமுன உறுப்பினர்கள் சஜித் பக்கம்

கொழும்பு, ஜூன் 22

பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர்கள் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொண்டனர்.

பதுளை மாவட்டத்தின், ஊவா, பரணகம மற்றும் எல்ல பிரதேச சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித் துவப்படுத்தியிருந்த நிலையில் சஜித் பிரேமதாசவுடன் இணைந்துள்ளனர்.

இதில் சுயேச்சை உறுப்பினர்கள் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவின் எல்ல பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்த நிமல் ரஞ்சித் வீரசிங்க, பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களான சமந்த கபில ரத்நாயக்க, ஹேமாவதி குமாரிஹாமி மற்றும் பாரத ரணசிங்க ஆகியோர் இவ்வாறு இணைந்து கொண்டனர்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியில் புதிதாக 20 இலட்சம் உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளும் செயற்திட்டம் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். (அ)

## விமான நிலைய பாதுகாப்பு அதிகாரி கைது

கொழும்பு, ஜூன் 22

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட சுமார் 4 கோடியே 80 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டுகளை எடுத்துச் செல்ல முயன்ற விமான நிலைய பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை விமானத்தில் வந்த நபர் ஒருவர் 18 தங்க பிஸ்கட்டுகளை புலம்பெயர்ந்த விமான பயணிகள் முனையத்தின் மலசலகூடத்தில் வைத்து குறித்த அதிகாரியிடம் கொடுத்துள்ள நிலையில், அவர் அவற்றை தனது ஆடையில் மறைத்துக் கொண்டு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து வெளியேற முயன்றதாக குறிப்பிடப்படுகின்றது.

இதன்போது, சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகளினால் அவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரிடம் இருந்து மீட்கப்பட்ட தங்க பிஸ்கட்டுகள் 02 கிலோ 86 கிராம் எடையுடையது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் 15 வருடங்களாக விமான நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றிய 40 வயதுடைய ஹக்மன பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

60 ஆயிரம் ரூபாவுக்காக குறித்த தங்க பிஸ்கட்டுகளை விமான நிலையத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்ல இந்த பாதுகாப்பு அதிகாரி முயற்சித்ததாக சுங்கப் பிரிவினர் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (அ)

## முன்னாள் கடற்படை சிப்பாய் கைது

கொழும்பு, ஜூன் 22

காதலியின் நிர்வாண புகைப்படத்தை வட்ஸ் அப்பில் பகிர்ந்து அச்சுறுத்தியதாகக் கூறப்படும் முன்னாள் கடற்படை சிப்பாய் ஒருவர் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பலப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் இராணுவ சிப்பாயொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பெண் ஒருவருடன் நீண்ட காலமாகக் காதல் உறவில் ஈடுபட்டிருந்துள்ள நிலையில் இந்த பெண், சந்தேக நபருடனான காதல் உறவை முறித்துக் கொள்வதற்குத் தீர்மானித்துள்ளார்.

இதனை அறிந்து கொண்ட சந்தேக நபர், காதலியின் நிர்வாண புகைப்படங்களை வட்ஸ் அப் மூலம் காதலியின் நெருங்கிய நண்பர்களுக்கு பகிர்ந்துள்ளார்.

பாதிக்கப்பட்ட காதலி இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்ததையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
22.06.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், வைகாசி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் தலைவர்களின் இராஜதந்திர ஆளுமை

இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கருடனான சந்திப்பின் போது, தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ஒருவருக்கு ஒருவர் முரண்டு பேசியமையானது, தமிழ் தலைவர்களின் அரசியல் பொறுப்பற்ற தனத்தை மீண்டுமொருமுறை நிரூபித்திருக்கின்றது. தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு தொடர்பில் தமிழ் கட்சிகளிடையே ஆதரவு - எதிர்ப்பு என்னு மடிப்படையிலேயே, கருத்துக்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக எம்.ஏ.சுமந்திரன் தமிழ் பொது வேட்பாளரை தோற்கடிக்காமல் விடப்போவதில்லை என்று சூளுரைத்திருக்கின்றார். இதேபோன்று, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி தேர்தலை பகிஷ்கரிப்பதாக அறிவித்திருக்கின்றது. இந்த நிலையில் இவ்வாறான முரண்பாடுள்ளவர்கள் பங்குகொள்ளும் இடத்தில் எவ்வாறான விடயங்களை பேச வேண்டும் என்னும் புரிதல் தமிழ் கட்சிகளின் தலைவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். கருத்துக்களை முன்வைக்க வேண்டும். ஆனால் நாசுக்காக, தந்திரோபாயமாக முன்வைக்க வேண்டும். இத்தனை அனுபவங்களுக்கு பின்னரும் கூட, அவ்வாறான அரசியல் திறனை தமிழ் கட்சிகளின் தலைவர்கள் கற்றுக்கொள்ளவில்லையா?

தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் புரிதலை உற்றுநோக்கினால், தூதரக அதிகாரிகளுக்கும் இந்தியாவின் உயர்மட்ட இராஜதந்திரிகளுக்கும் இடையில் வேறுபாடு தெரியாதவர்களாகவே இருக்கின்றனர். இதற்கு அரசியலில் பழுத்தவர் என்று கருதப்படும் இரா.சம்பந்தன் கூட கடந்தகாலத்தில் விதிவிலக்காக இருந்ததில்லை. சம்பந்தன் வரலாறு தொடர்பில் பேச முற்படுகின்றபோது, அதனால் இராஜதந்திரிகள் பலர் எரிச்சலடைந்திருக்கின்றனர். ஏனைய கட்சிகளின் தலைவர்களுடன் பேசுகின்ற போது, அதனை நட்புரீதியில் கூறியும் இருக்கின்றனர்.

இராஜதந்திரிகள் வழங்கும் சொற்ப நேரத்திற்குள், தமிழ் மக்களின் பிரச்னைகளை மனக்குறைகளை முடிந்தவரையில் எடுத்துரைக்கும் வல்லமையுடன் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் இருக்க வேண்டும் - அதேவேளை, சந்திப்பு முடிந்ததும் தங்களை வல்லவர்கள் போன்று காண்பிக்கும் நோக்கிலும் வார்த்தைகளை பயன்படுத்தக் கூடாது. இது தொடர்பில் என்னதான் அறிவுரைகளை வழங்கினாலும், நமது அரசியல்வாதிகளோ மீண்டும், ஒரே தவறுகளையே செய்து கொண்டிருக்கின்றனர்.

75 வருடகால அரசியல் வரலாற்றின் தொடர்ச்சிதான் இன்றைய அரசியல். இந்தக் காலகட்டத்தில் பிராந்திய மற்றும் சர்வதேச தரப்புக்களுடன் ஊடாடிய பல அனுபவங்கள் தமிழர் அரசியலுக்குண்டு. ஆனால், இத்தனை அனுபவங்களுக்கு பின்னரும் கூட, சவுத் புளொக்கின் தலைமைப் பொறுப்பிலிருக்கும் ஒருவருடன் எவ்வாறு பேசவேண்டும் என்பதை இன்னும் புரிந்து கொள்ளாமலேயே இருக்கின்றனர் அரசியலில் பழுத்தவர்கள் என்போர். ஒரு நாட்டை அணுகும் போது, எங்களுடைய விருப்பங்களை மனக்குறைகளை சொல்லத்தான் வேண்டும். ஆனால், அதனை கூறும் போது, அந்த நாட்டின் கொள்கை நிலைப்பாடு என்ன, அவர்களுக்கு இலங்கையின் மீதுள்ள ஆர்வம் என்ன - குறிப்பாக வடக்கு, கிழக்கின் மீது, இந்தியா எவ்வாறான கரிசனைகளை கொண்டிருக்கின்றது? இந்தக் கேள்விகளின் அடிப்படையில்தான் விடயங்களை நோக்கவேண்டும். இராஜதந்திர உலகை புரிந்துகொள்வதில் தமிழ் அரசியல்வாதிகளின் நிலையோ, விடிய - விடிய இராமாயணம், ஆனால் விடிந்தவுடன் - இராமர் சீதைக்கு யாராம் - என்பதுபோலவே இருக்கின்றது.

# வீடமைப்பு திட்டங்களை மீண்டும் ஆரம்பியுங்கள்!

## சஜித் சபையில் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 22

அரசியல் பழிவாங்கும் நோக்கில் நல்லாட்சி அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட பல வீட்டுத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதுதொடர்பாக கவனம் செலுத்தி இதனால் பாதிக்கப்பட்டுள்ள பயனாளிகளுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்-

2019 ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு, எமது நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வந்த ஏராளமான வீட்டுத் திட்டங்கள் ஒரே நேரத்தில் இடை நிறுத்தப்பட்டன. இதன்கீழ் இலட்சக்கணக்கில் வீடுகள் நிர்மாணிக்க வழங்கப்பட்ட நிலுவைத் தவணை கூட இடை நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இந்த வீடமைப்புத் திட்டங்களால் பயனடைந்தவர்களுக்கு இந்தியாவில் இருந்து பெறப்படும் உதவிகள் கூட நிறுத்தப்பட்டுள்ளது .

கோத்தாபய ராஜபக்ஷ் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டது. வடக்கு கிழக்கு பிரதேச மக்கள் கூட இது குறித்து என்னிடம் தெரிவித்துள்ளனர். மீதமுள்ள தவணையை பெறாமல், வீடுகளை பூரணப்படுத்த முடியாமல் தவிக்கும் ஏராளமான மக்கள் நாடு முழுவதும் இருப்பதால், இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஜனாதிபதி அவருக்கு தேவையான நிதியை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அனுமதித்துக் கொண்டார். இவ்வாறு அவர் ஒதுக்கிக் கொண்ட நிதியைப் பயன்படுத்தியேனும் இந்தத் நிலுவைத் தவணைகளை வழங்கி, அவர்களின் வீடுகளை பூரணப்படுத்துவதற்கு ஒத்துழைப்பை நல்க வேண்டும், அவ்வாறு இந்த அரசாங்கம் இந்நடவடிக்கையை முன்னெடுக்காவிட்டால், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இந்த வேலைத்திட்டம் உடனடியாக முன்னெடுக்கப்படும் என்பதை நாங்கள் உறுதியாகவும் தெளிவாகவும் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.

(அ)

# கதிர்காமத்துக்கு பாத யாத்திரை

வடமராட்சி ஜூன் 22

நிலையான சமாதானத்திற்காக நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் முதல் கதிர்காமம் வரை பாத யாத்திரை இளைஞர்களால் மேற்கொள்ளப்பட உள்ளதாக யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ். வினோதினி தெரிவித்துள்ளார்.

இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நிலையான சமாதானத்திற்காக நல்லிணக்கத்தை கட்டியொழுப்பும் நோக்கில் 15-29 வயதிற்கு இடைப்பட்ட இலங்கை வாழ் இளைஞர் சமூகத்தை சேர்ந்த இளைஞர் யுவதிகளை உள்ளடக்கிய கதிர்காம பாத யாத்திரை நிகழ்வுக்கான ஆரம்ப விழாவினை எதிர்வரும் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு தொண்டைமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து ஆரம்பித்து வைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் சுமார் 200 இளைஞர்கள் கலந்து கொள்ள உள்ளனர். (அ-2)

# அம்பன் அமெரிக்கன் மிஷன் பாடசாலை பழைய மாணவர் சங்க நிர்வாகம் தெரிவு

வடமராட்சி, ஜூன். 22

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலைக்கான பழைய மாணவர் சங்க தெரிவு நேற்று காலை 9:30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் திரு கண்ணதாசன் தலைமையில் இறைவணக்கத்துடன் ஆரம்பமானது.

வரவேற்புரை, தலைமை உரையை தொடர்ந்து பழைய மாணவர் சங்கத்தின் கடந்த கூட்ட அறிக்கை, கணக்கறிக்கை என்பன வாசிக்கப்பட்டதை தொடர்ந்து பாடசாலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு பணிகள் தொடர்பாக ஆராயப்பட்டதன் பின்னர் புதிய நிர்வாகம் தெரிவு இடம் பெற்றது.

இதில் தலைவராக சம்பிரதாயபூர்வமாக பாடசாலை அதிபர் திரு கண்ணதாசன், செயலாளராக செல்வி பா.விஜிதா, பொருளாளராக தி.றஜி, உப தலைவர் இரா.செந்தூரன், உப செயலாளர் ச.கபில்ராம், உறுப்பினர்கள் வே.வேல்ராஜ் சி.சிரஞ்சீவி, ஜெயந்தன் குவிதா, த.காண்டீபன், ம.கஜன், து.யசோதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் திரு.கண்ணதாசன், பிரதி அதிபர் பானுமதி, பழைய மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (அ-2)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 22 சனிக்கிழமை
குரோதி வருடம் - ஆனி 08
நல்ல நேரம் : 07.30 - 08.30
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : பிரதமை




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்துவைக்க முடியவில்லை என ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் போராட வேண்டும். பொறுமை தேவைப்படும்.

**இடபம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் அதிகாரி உங்கள் புதிய முயற்சியை பாராட்டுவார். நன்மை நடக்கும் நாள்.

**மிதுனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பிள்ளைகளின் பெருமைகளை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். அமோகமான நாள்.

**கடகம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். சில சூட்சுமங்களை உணர்வீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் கருத்துக்கு ஆதரவு பெருகும். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். அதிரடியான மாற்றம் உண்டாகும்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
மறைமுக விமர்சனங்களும் எதிர்காலம் பற்றி பயம் வந்து நீங்கும். யாருக்காகவும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். சோர்வு அடைவீர்கள். தன்னம்பிக்கை தேவைப்படும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் கடமை உணர்வுடன் செயல்பட தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். இனிமையான நாள்.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில்புதுவாடிக்கையாளர்கள் வருவார்கள். அதிகாரிகளின் நம்பிக்கையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். மனசாட்சிபடி செயல்பட வேண்டிய நாள்.

# அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் சட்டப்பேரவையில் அமளி

## வலுக்கட்டாயமாக வெளியேற்றிய சபாநாயகர்

சென்னை, ஜூன் 22

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தியதால் நிகழ்ந்த மரணங்கள் குறித்து சட்டப்பேரவையில் அ. தி. மு.க., பா. ம. க. , பா. ஜ. க. ஆகிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்ட நிலையில் அ. தி. மு. க. எம். எல். ஏக்கள் அனைவரும் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.



கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணங்கள் தொடர்பாக கவனவீர்ப்புத் தீர்மானம் வழங்கிய அ. தி. மு. கவினர் நேற்று கறுப்பு மேலங்கியுடன் சட்டப்பேரவைக்கு வருகை தந்தனர். தொடர்ந்து சபாநாயகர் வந்ததும் சட்டப்பேரவை தொடங்கிய நிலையில் அ. தி. மு.க., பா. ம. க., பா.ஜ.க. ஆகிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபடத் தொடங்கினர். சபாநாயகர் அப்பாவு இருக்கையை முற்றுகையிட்டு உறுப்பினர்கள் அமளி செய்தனர்.

சட்டப்பேரவை நிகழ்வுகளை ஒத்திவைத்துவிட்டு கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய மரணங்கள் தொடர்பாக விவாதிக்க வேண்டும் என அவர்கள் குரல் எழுப்பினர். கூடவே 'பதவி விலகுங்கள் ஸ்டாலின்' என்ற பதாகையை காண்பித்தவாறு அவர்கள் முழக்கங்கள் எழுப்பினர்.

எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த தீர்மானத்தின் மீது கேள்வி நேரம் முடிந்ததும் விவாதிக்கப் படும் என்று சபாநாயகர் அப்பாவு விளக்கமளித்தார். ஆனால், அவற்றை ஏற்றுக் கொள்ளாமல் உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். இதனையடுத்து சபாநாயகர், அமளியில் ஈடுபட்ட எம். எல். ஏக்களை வெளியேற்ற உத்தரவு பிறப்பித்தார்.

இதன்படி, அவைக் காவலர்கள் அ. தி. மு. க. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர். பி. உதயகுமார் உள்ளிட்ட உறுப்பினர்களை குண்டுக்கட்டாக தூக்கி வெளியேற்றினர். (எ)

---

தி. மு. கவுக்கு எதிர்ப்பு சட்டப்பேரவைக்கு

# கறுப்பு மேலங்கியுடன் வந்த அ. தி. மு. க. எம். எல். ஏக்கள்!

சென்னை, ஜூன் 22

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் முகமாகவும் தி. மு. க. அரசுக்கு கண்டனம் வெளியிடும் வகையிலும் பிரதான எதிர்க்கட்சியான அ. தி. மு. க. எம். எல். ஏக்கள் நேற்று சட்டப்பேரவைக்கு கறுப்பு மேலங்கியுடன் வருகை தந்தனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், கருணாபுரம் பகுதியில் கள்ளச் சாராயம் அருந்தி 50 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். மேலும் பலர் தற்போதும் அபாய கட்டத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக, அ. தி. மு. க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. (எ)

---

# கள்ளச்சாராய மரணம் குறித்து சி. பி. ஐ. விசாரணை வேண்டும்

## அமித் ஷாவுக்கு அண்ணாமலை கடிதம்

சென்னை,ஜூன் 22

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தியதால் ஏற்பட்ட மரணங்கள் குறித்து சி. பி. ஐ. விசாரணைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தமிழக பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஆண்டு விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் கள்ளச்சாராயம் அருந்தி 23 பேர் உயிரிழந்தனர். தி. மு. க. ஆட்சியில் கடந்த 2 ஆண்டுகளில், கள்ளச்சாராயத்தால் 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

பொலிஸாருக்குத் தெரிந்தே, சட்டவிரோத மது விற்பனை நடைபெறுகிறது. எனவே, மாநில பொலிஸ் துறை மூலம் விசாரணை நடத்தினால், உண்மைகள் வெளிவராது. எனவே, சி. பி. ஐ. விசாரணைக்கு உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்- இவ்வாறு அண்ணாமலை தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களின் சடலங்களுக்கு அஞ்சலி செலுத்திய அண்ணாமலை, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார். (எ)

# 15 நாட்கள் சிறை!

கள்ளக்குறிச்சி, ஜூன் 22

கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாராயம் அருந்தி 50 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த விவகாரத்தில், கைதான 4 பேரையும் 15 நாட்கள் மத்திய சிறையில் தடுத்து வைக்க மாவட்ட தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கள்ளச்சாராயம் அருந்தியவர்கள் கொத்துக்கொத்தாக உயிரிழப்புகள் ஏற்பட்டதும் இந்த நால்வரும் கள்ளக்குறிச்சி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். இந்த நிலையிலேயே மேற்கண்டவாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த காலத்தை மறந்துவிடக்கூடாது

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 22

**மருந்து, எரிபொருள், உரம் வழங்க முடியாமல் தவித்த கடந்த காலத்தை யாரும் மறந்துவிடக் கூடாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

பொரலஸ்கமுவ ஹோட்டலில் நடைபெற்ற அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் 09 ஆவது மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடுத்த சந்ததியினருக்கு இவ்வாறான இருண்ட அனுபவத்திற்கு இடமளிக்காமல் புதிய பொருளாதார மாற்றத்தின் ஊடாக இலங்கையை கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் திட்டத்தில் அனைவரும் இணைந்து கொள்ள வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் இதில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கருத்து தெரிவிக்கையில்-

அனைத்து இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் கடந்த இக்கட்டான காலப்பகுதியில் இலாபத்தைப்



பொருட்படுத்தாமல் சேவையை வழங்கியது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இன்று அதையே செய்கின்றார்.

மேலும் இவ்வளவு குறுகிய காலத்தில் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க முடியும் என்று நாமும் நினைக்கவில்லை. ஆனால் இன்று நாம் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்-என்றார்.

# போதைப்பொருள் வியாபாரி என்ற முத்திரை சமூகத்தால் வழங்கப்பட்டது

## பொலிஸ் மா அதிபர்

கொழும்பு, ஜூன் 22

தனக்கு போதைப்பொருள் வியாபாரி என்ற முத்திரை சமூகத்தால் வழங்கப்பட்டதாகவும், எந்தத் தவறும் செய்யாத தனது பிள்ளைகளுக்கு போதைப்பொருள் வியாபாரியின் என முத்திரை குத்தப்பட்டதாகவும் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.



புனர்வாழ்வளிக்கப்பட்ட மக்களை சந்திக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்படி புனர்வாழ்வுத் திட்டத்தின் ஊடாக நுகேகொடை மற்றும் களனி ஆகிய மூன்று பிரிவுகளில் மாத்திரம் போதைப் பொருள் பாவனையிலிருந்து சுமார் 1500 இளைஞர்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

மேல்மாகாணத்தில் களுத்துறை, பாணந்துறை, கம்பஹா மற்றும் நீர்கொழும்பு உட்பட இலங்கை முழுவதிலும் 285 நிலையங்கள் திறக்கப்படவுள்ளதாகவும், இதன்மூலம் போதைப் பொருளுக்கு அடிமையான சுமார் 12,500 இளைஞர்களின் உயிரைக் காப்பாற்றவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் என் வீட்டில், எந்தத் தவறும் செய்யாத என் பிள்ளைகள், போதைக்கு அடிமையான பிள்ளைகள் என்று முத்திரை குத்தப்பட்டனர். அத்துடன் போதைப்பொருள் வியாபாரியின் மனைவி என மனைவியை மக்கள் அவமானப்படுத்தினர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி; இதுவரையில் 2155 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூன் 22

**2024 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் தொடர்பாக 2155 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

**2024 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 11 சட்டவிரோத வேலைவாய்ப்பு நிறுவனங்கள் சுற்றி வளைக்கப்பட்டுள்ளதுடன், 65 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகளை சுற்றிவளைக்கும் நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதுவரையான காலப்பகுதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மோசடிகள் தொடர்பாக 2155 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் குறித்த பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

பத்தரமுல்லையிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக ஹாலி எல, இரத்தினபுரி, தங்காலை, குருணாகல் மற்றும் கண்டி அலுவலகங்களிலும் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படுவதாக பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்டுள்ள நபர்கள் அல்லது நிறுவனங்கள் தொடர்பில் பணியகத்தின் விசேட விசாரணை பிரிவின் 0112 864 241 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சீரற்ற காலநிலை காரணமாக சேதமுற்ற வீடுகளுக்கு இழப்பீடு

கொழும்பு, ஜூன் 22

சீரற்ற காலநிலை காரணமாக முற்றிலும் சேதமடைந்த வீடுகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு அல்லது அந்த வீடுகளை மீண்டும் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் கடந்த சில நாட்களாக நிலவும் சீரற்ற காலநிலையினால் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்த வீடுகளை புனரமைப்பது தொடர்பாக நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் விசேட கூட்டம் இடம்பெற்றது.

கடந்த சில நாட்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளைப் பாதித்த சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட பலத்த காற்று, வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களினால் சேதமடைந்த வீடுகளை புனரமைப்பது அல்லது அதிகபட்ச வரையறைக்கு உட்பட்டு தகுந்த இழப்பீடு வழங்குவது தொடர்பாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

முற்றிலும் சேதமடைந்த வீடுகளுக்கு பயனாளிகளின் இணக்கப்பாட்டின் பேரில் அதிகபட்ச வரையறைக்கு உட்பட்டு உரிய இழப்பீடு வழங்குதல் அல்லது முப்படைகளின் பங்களிப்புடன் உடனடியாக வீடுகளைக் நிர்மாணிப்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

மேலும், பகுதியளவில் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்காக, இடம்பெற்றுள்ள சேதங்களை மதிப்பீடு செய்து அதிகபட்ச வரையறைக்கு உட்பட்டு இழப்பீடு வழங்குவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இயற்கை அனர்த்தங்களினால் முழுமையாகவும் பகுதியளவும் சேதமடைந்த வீடுகள் தொடர்பாக முறையான அறிக்கையை வழங்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்களுக்கு சாகல ரத்நாயக்க இதன்போது பணிப்புரை விடுத்தார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன், முப்படைத் தளபதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களும் இணையவழி தொழில்நுட்பத்தின் ஊடாக இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (அ)

# பொருள்களின் விலை குறைப்பை நாட்டு மக்கள் அனுபவிக்கவேண்டும்

## துறைசார் மேற்பார்வைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 22

பொருட்களின் விலைகள் குறைவதனால் கிடைக்கும் நன்மையை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் வகையில் வேலைத் திட்டத்தைத் தயாரிக்குமாறு வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றி, துறைசார் மேற்பார்வைக் குழு, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராரச்சி தலைமையில் கூடிய வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கம் ஒன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டத்திலேயே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எரிபொருள் மற்றும் எரிவாயு உள்ளிட்ட பொருட்கள் பலவற்றின் விலைகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் ஏற்பட்டுள்ள நன்மையைப் பொதுமக்களிடம் சேர்ப்பதற்கு வர்த்தகர்கள் நடவடிக்கை எடுக்கவில்லையெனக் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விசேடமாக பகல் உணவுப் பொதிகள், சிற்றுண்டிகள், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் கட்டடத்துறைக்கான பொருட்களின் விலை ஒப்பீட்டளவில் குறையவில்லையென்றும் தெரிவித்தார். எனவே, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, விலைகளைக் கட்டுப்படுத்துவது அல்லது ஏதாவது முக்கியமான விடயங்கள் தொடர்பில் பிரச்சினைகள் காணப்பட்டால் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான சட்டங்களை இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இவ்விடயம் தொடர்பில் அமைச்சருடன் கலந்துரையாடவுள்ளதாகவும் விலைக் கட்டுப்பாடு தொடர்பான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்து ஒரு மாதகாலத்துக்குள் அது பற்றிய அறிக்கையைக் குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் துறைசார் மேற்பார்வைக் குழுத் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# பஸ் தரிப்பிடத்தை மோதித்தள்ளி வான் விபத்து!

கொழும்பு, ஜூன் 22

காலி - அக்குரஸ்ஸ வீதியில் தெடுதெனிய பகுதியில் உள்ள பஸ் தரிப்பிடத்துடன் வேன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

வேன் சாரதி உறங்கியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது வேனில் பயணித்தவர்கள் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் பஸ் தரிப்பிடம் முற்றிலும் சேதமடைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஐ அமுல்படுத்துவதாகக் கூறும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்காதீர்!

## கோருகின்றார் சரத் பொன்சேகா



கொழும்பு, ஜூன் 22

நாட்டை ஐக்கியப்படுத்துவதற்காகவே படையினர் உயிர்தியாகம் செய்தனர். எனவே, 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவேன் எனக் கூறும் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வடக்கு மற்றும் தெற்கு மக்கள் வாக்களிக்கக்கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அத்துடன், பெயர் குறிப்பிடாது மறைமுகமாக சஜித் பிரேமதாசமீது சரமாரியாக அவர் சபையில் சொற்கணைகளைத் தொடுத்தார். 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது அப்பன் வீட்டு சொத்து அல்ல எனவும் சாடினார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய பொன்சேகா மேலும் கூறியவை வருமாறு-

பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு எதிரணி பிரதம கொறடாவிடம் நேரம் கோரி இருந்தேன். எனக்கு நேரம் ஒதுக்க வேண்டாம் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று அவர் பதிலளித்தார். அத்துடன், ஜனாதிபதி தேர்தலின் போது சஜித்துக்கு சார்பாக வேலை செய்வீர்களா எனவும் வினவினார். இறுதியில் எனக்கு நேரம் வழங்கவில்லை. எனினும், ஆளுங்கட்சியிடம் பேசி நேரத்தை பெற்றுக்கொண்டேன்.

நாம் மக்களுக்கு சாராயம் கொடுத்து அரசியல் நடத்துவதில்லை. ஊழல், மோசடிகளில் ஈடுபடுவதும் கிடையாது. கொழும்பில் உள்ள கசினோக் காரர்களிடம் காசு வாங்கி பாடசாலைகளுக்கும், வைத்தியசாலைகளுக்கும் பொருட்களை வழங்குவதும் கிடையாது.

இப்படி செய்பவர்கள்தான் நாட்டின் தலைவராக பார்க்கின்றனர். கட்சி தலைவர் என்பதற்காக ஆட்சி அதிகாரத்தை வழங்கும் முடிவை எடுத்தால் அது நாட்டுக்கே பாதகமாக அமையும்.

தந்தை ஜனாதிபதியாக இருந்தார் என்பதற்காக நபர்களை ஜனாதிபதியாக்க முடியாது. இது தொடர்பில் மக்கள் சிந்தனையுடன் செயற்பட வேண்டும். பொருட்களை பகிர்பவர்களை அல்ல சிறந்த தலைவரையே மக்கள் தெரிவுசெய்ய வேண்டும்.

ஜனாதிபதி ஆகவேண்டும் என்ற கனவில் இருப்பவர்கள், வடக்குக்கு செல்கின்றனர். 13 வழங்கப்படும் என உறுதியளிக்கின்றனர். தெற்கில் யார் எதிர்த்தாலும் 13 வழங்கப்படுமாம். அப்படி வழங்குவதற்கு 13 என்ன அப்பா வீட்டு சொத்தா?

நாட்டை ஐக்கியப்படுத்துவதற்காகவே படையினர் உயிர் தியாகம் செய்தனர். எனவே, வடக்கும், தெற்கும் என அனைத்து பகுதியிலும் உள்ள மக்கள் ஐக்கியமாக வாழ வேண்டும். தெற்கில் உள்ளவர்கள் வடக்கில் உள்ள வாக்குகளுக்காக இங்கிருந்து சென்று உறுதியளிக்கின்றனர்.

வடக்கில் உள்ள சில அரசியல்வாதிகள், இதை பெற்றுக் கொடுப்போம் எனக் கூறி நாடாளுமன்றம் வருகின்றனர். 13 ஐ வழங்குவோம் என வாக்கு கேட்கும் நபர்களுக்கு தெற்கு மக்களும், வடக்கு மக்களும் வாக்களிக்கக்கூடாது- என்றார்.

(அ)

# பௌத்த மதத்தை காப்பது அரசமைப்பின் பொறுப்பு!

## ஜனாதிபதி விசேட அறிக்கை

கொழும்பு, ஜூன் 22

இலங்கை எதிர்நோக்கும் அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து அபிவிருத்தியடைந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு மஹரஹத் மிஹிந்து போதித்த தர்ம மார்க்கத்தைப் பயன்படுத்துமாறு அனைவரையும் கேட்டுக்கொள்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொசன் பொஹோயாவை முன்னிட்டு விடுத்துள்ள விசேட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொசோன் போஹோ தினம் என்பது இலங்கையின் தேசிய கலாச்சாரத்தின் தொடக்க நாளாக இலங்கை பௌத்தர்களால் என்றென்றும் கொண்டாடப்படும் புனிதமான நாளாகும்.

குறிப்பாக உள்ளூர் மண்ணில் உணவு உற்பத்தி செய்து, கருத்து வேறுபாடுகள், கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, சுல்ல ஹத்தி பதோபம சூத்திரத்தை அறிந்து இலங்கை அரசை தயார்படுத்த மிஹிந்து மஹரஹத் வழங்கிய அறிவுரையை இந்த தருணத்தில் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும்.

மேலும் பௌத்த மதத்தைப் பாதுகாத்து வளர்ப்பதற்கு அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள பொறுப்பு உரிய முறையில் நிறைவேற்றப்படும் என உறுதியளித்து அனைவருக்கும் பொசன் வாழ்த்துக்களையும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# சிறுபோக நெல் கொள்வனவுக்கு சலுகை வட்டி வீதத்தில் கடன்

கொழும்பு, ஜூன் 22

சிறுபோக நெல் கொள்வனவிற்காக சலுகை வட்டி வீதத்தில் கடன் வழங்கப்படவுள்ளது.

2024 சிறுபோகத்திற்கான நெல் கொள்வனவிற்காக சலுகை வட்டி வீதத்தில் கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 6000 மில்லியன் ரூபா வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படவுள்ளது.

சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள், நெல் களஞ்சிய உரிமையாளர்கள், மொத்த நெல் கொள்வனவாளர்களுக்கு இந்த கடன் வழங்கப்படவுள்ளது.

(அ)

# ரயிலில் விவசாய பொருட்களை எடுத்துச் செல்ல விசேட திட்டம்!

கொழும்பு, ஜூன் 22

பெலியத்தயிலிருந்து மருதானைக்கு ரயிலில் விவசாய பொருட்களை எடுத்துச் செல்லும் விசேட வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி ஜூன் 29ஆம் திகதி பெலியத்தவிலிருந்து மருதானைக்கு விவசாயப் பொருட்களை ரயிலில ஏற்றிச் செல்லும் முன்னோடி திட்டமாக இது திட்டமிடப்பட்டுள்ளது.

உலக வங்கி உதவியுடன் விவசாயப் பொருட்களைக் கொண்டு செல்லும் முறையைத் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் விவசாய போக்குவரத்து வசதிகளுக்காக ரயில் முன்பதிவு செய்வதற்கான வாய்ப்பு செயலி மூலமாகவும் தொலைபேசி அவசர அழைப்பை பயன்படுத்தியும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதன் மூலம் விவசாயிகள் தங்களது விவசாயப் பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்யவும், அறுவடைக்குப் பின் ஏற்படும் சேதங்களை குறைக்கவும், போக்குவரத்து கட்டணத்தை குறைக்கவும் முடியும் என ரயில்வே திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் தர்மசிறி, காலி மாவட்ட செயலாளர் டபிள்யு.ஏ.தர்மசிறி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் சிந்தக ஹெட்டியாராச்சி, இலங்கை ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் என பலரும் கலந்துகொண்டனர்.

# 4 வயது மகனை கொடூரமாக தாக்கி வீடியோ எடுத்த தந்தை கைதானார்!

கொழும்பு, ஜூன் 22

ஊவா பரணகம பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கம்பஹா தோட்டத்தில் தனது 4 வயது மகனைக் கொடூரமாக தாக்கும் காணொளியை வெளிநாட்டில் உள்ள தனது மனைவிக்கு அனுப்பி வைத்த குற்றச்சாட்டில் 26 வயதுடைய தந்தையொருவர் கைது செய்யப்பட்டதாக ஊவா பரணகம பொலிஸார் தெரிவித்தனர். .

கம்பஹா தோட்டம் மேல் பிரிவு உடுபுஸ்ஸல்லாவ பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் மனைவி கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் வெளிநாடு சென்றுள்ளதாகவும் கணவனுக்கு தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தாத காரணத்தினால் குழந்தையை அடிக்கும் காட்சியை வீடியோவாக பதிவு செய்து இமோ தொழில்நுட்பம் மூலம் மனைவிக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் அவர் இந்த வீடியோவை சமூக வலைதளங்களில் வெளியிட்டதாகவும், அதன்படி அவர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்கப்பட்டதாக கூறப்படும் குழந்தையும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் குழந்தை, வெலிமடை சட்ட வைத்திய அதிகாரியிடம் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவது தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் களுபஹனவின் பணிப்புரையின் பேரில் ஊவா பரணகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரபோத கபில கல்லகே சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(அ)

# மணிலா- கட்டுநாயக்க நேரடி விமான சேவை மீள ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 22

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு நேரடி விமான சேவைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கான பிலிப்பைன்ஸ் தூதுவருக்கும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் பெருமளவிலான பிலிப்பைன்ஸ் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த நேரடி விமான சேவையை எதிர்வரும் காலத்தில் ஆரம்பிப்பதற்கு தேவையான அனுமதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

# பத்து மாவட்டங்களுக்கு டெங்கு அபாய எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன் 22

சீரற்ற காலநிலையுடன் பத்து மாவட்டங்களில் டெங்கு வேகமாக பரவி வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி கடந்த 24 மணி நேரத்தில் 161 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அத்துடன், இம்மாதம் 20 நாட்களுக்குள் நாட்டில் 2,044 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் மேல் மாகாணத்தில் அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் இந்த வருடத்தில் இதுவரை பதிவாகியுள்ள டெங்கு மரணங்களின் எண்ணிக்கை 9 ஆகும்.

இதன்படி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, யாழ்ப்பாணம், கண்டி, குருநாகல், புத்தளம், காலி, கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் டெங்கு பரவல் அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லுண்டாய் பகுதி மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம்!





யாழ்ப்பாணம், ஜூன் 22

**பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், கல்லுண்டாய் பகுதி மக்கள் அவர்களது குடியேற்ற திட்டத்திற்கு அருகாமையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்-

கல்லூரண்டாய் குடியேற்றத் திட்ட பகுதியில் ஜே/135, ஜே/136 என இரண்டு கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. ஆனால் மொத்தமாக 88 குடும்பங்கள் தான் வசிக்கின்றன. ஜே/135 கிராம சேவகர் பிரிவில் சுமார் 27 குடும்பங்கள் தான் உள்ளன. ஏனையோர் ஜ/136 கிராம சேவகர் பிரிவில் தான் உள்ளனர்.

இரண்டு கிராமங்களையும் பிரிப்பதற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் அனுமதியுடன், ஜேர்மனியை சேர்ந்த பெண் ஒருவரின் நிதியில் கட்டடம் ஒன்று கட்டப்படுகிறது. இந்த கட்டடம் ஜே/135 பகுதியைச் சார்ந்ததாகவே உள்ளது. இதனால் ஜே/136 பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த கட்டடம் யாருக்காக, எந்த நோக்கத்திற்காக, எந்த நிர்வாகத்தின் கீழ் கட்டப்படுகின்றது என்ற எதுவும் எமக்கு தெரியாது. இதுகுறித்து கிராம சேவகரை கேட்டபோது, அது சம்பந்தமான எந்தவொரு உத்தியோகபூர்வ தகவலும் தனக்கு வழங்கப்படவில்லை என கூறுகிறார்.

சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரே இதில் தலையிட்டு குழப்பத்தை ஏற்படுத்துகின்றார். கிராம சேவகரா சமுர்த்தி உத்தியோகத்தரா என்ற குழப்பத்தில் நாங்கள் உள்ளோம். இரண்டு பகுதி மக்களும் சந்தோஷமாக இருந்தோம். ஆனால் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் இரண்டு பிரிவு மக்களையும் பிரித்து பிரச்னையை உண்டாக்குகின்றார்.

சமுர்த்தி உத்தியோகத்தர் தனது அலுவலகத்தில் இருக்காமல் ஜே/135 கிராம சேவகர் பிரிவில் உள்ள சில பெண்களின் வீடுகளுக்குள் இருந்து கதைத்துக்கொண்டு இருக்கின்றார். ஏதாவது தேவைக்கு அலுவலகத்துக்கு சென்றாலும் அங்கு சமுர்த்தி உத்தியோகத்தர் இல்லை.

சமுர்த்தி உத்தியோகத்தருக்கு இடமாற்றம் கிடைத்தும் கூட அவர் செல்லாமல் இருக்கின்றார். இரண்டு கிராம சேவகர் பிரிவுகளையும் இணைத்து சந்தோஷமாக செயற்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை -என்றனர். (அ)

# வத்திராயனில் எரிகாயங்களுடன் ஆணொருவர் மக்களால் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் நேற்று முன்தினம் எரிந்த நிலையில் ஆணொருவர் பொதுமக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மருதங்கேணியைச் சேர்ந்த பவானி என்ற 43 வயதான ஆணொருவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வத்திராயன் பகுதியில் உள்ள வீடொன்றில் தனித்திருந்த குறித்த ஆண், தீப்பற்றிய நிலையில் அலறியடித்துக் கொண்டு வீட்டில் இருந்து வெளியே ஓடி வந்தவேளை பொதுமக்களால் மீட்கப்பட்டு மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக அவர் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்திற்கான காரணம் தெரியவராத நிலையில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் கைதானவர் 72 மணித்தியாலங்கள் தடுப்புக்காவலில்

கல்முனை, ஜூன் 22

ஐஸ் போதைப்பொருளை நீண்ட காலமாக விற்பனை செய்து வந்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரின் மகனை 72 மணித்தியாலங்கள் தடுப்புக் காவலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை - பெரிய நீலாவணை விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய குறித்த சந்தேக நபரை கல்முனை மத்ரஸா வீதிக்கு அண்மையில் வைத்து கைது செய்தனர்.

குறித்த நபரின் வசமிருந்து 5 கிராம் 80 மில்லி கிராம் பெறுமதியுடைய ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

இந்த நிலையில் சந்தேக நபரை நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய நிலையில் 72 மணித்தியாலங்கள் சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மேலும் இந்த நபர் கடந்த காலங்களில் பல்வேறு போதைப் பொருட்களுடன் பல தடவை கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்றும் பொலிஸார் கூறினர். (எ)

# சிங்களப் பாடசாலைகள் வடக்கு-கிழக்கில் இல்லை

## கெவிந்து குமாரதுங்க கவலை

கொழும்பு, ஜூன் 22

நாட்டில் 25 மாவட்டங்களிலும் தமிழ் மொழிமூல ஆரம்ப வகுப்பு பாடசாலைகள் காணப்படுகின்றன. இந்நிலையில் வடக்கு மற்றும் கிழக்கில் சிங்கள மொழி மூல பாடசாலைகள் இல்லாமல் இருப்பது கவலைக்குரியது.

இவ்வாறான நிலைமையில் எப்படி இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என சுயாதீன எதிரணியின் உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் மகளிர் வலுப்படுத்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது-

யுனெஸ்கோ பிரகடனத்தில் பிள்ளைகளுக்கு தாய் மொழியில் கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். ஆனால், 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிங்கள மொழி மூல பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் ஏற்கனவே கேள்விகளை எழுப்பியுள்ளேன்.

கடந்த 5 வருடங்களை எடுத்துக்கொண்டால் 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்படும்போது 25 மாவட்டங்களிலும் தமிழ் மொழிமூல வெட்டுப்புள்ளிகள் வெளியாகின்றன.

யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள பின்னரும் கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் சிங்கள வெட்டுப்புள்ளிகள் கிடையாது. வடக்கு மற்றும் கிழக்கில் சிங்கள மொழி மூலம் ஆரம்பக் கல்வி பாடசாலைகள் இல்லை என்பதனையே காட்டுகிறது.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களே உங்களின் மனசாட்சியிடம் கேட்டுப் பாருங்கள். யுத்த காலத்திலும் கூட கொழும்பு ரோயல் கல்லூரியில் தமிழ் மொழி மூலம் வகுப்புகள் இடம் பெற்றன.

ஆனால், வடக்கு, கிழக்கில் சிங்கள மொழிமூலம் வகுப்புகள் ஏதும் இல்லை. மட்டக்களப்பில் எத்தனையோ சிங்கள கிராமங்கள் உள்ளன. எத்தனையோ சிங்கள பாடசாலைகள் பிரபுக்களால் அமைக்கப்பட்டன. ஆனால், அவை இல்லாது இருக்கின்றன. இப்படி இருக்கையில் இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை எவ்வாறு உருவாக்க முடியும்- என்றார். (அ)

# பெற்றோலிய அதிகாரிகளின் மோசடி காரணமாக எரிபொருளுக்கு அதிக விலை செலுத்திய மக்கள்!

கொழும்பு, ஜூன் 22

எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு சுமார் 31,021 மில்லியன் ரூபா மேலதிக தரகு பணமாக செலுத்தப்பட்டமையினால் பொதுமக்களுக்கு எரிபொருளுக்கான மேலதிகச் செலவு ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் அறிக்கை மற்றும் தற்போதைய செயற்பாடுகளை ஆராய்வதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு முன்னிலையில் அழைத்த போதே இந்த விடயங்கள் தெரியவந்துள்ளதாக கூறப்படுகிறது.

அதிகாரிகள் செலுத்திய இந்த கட்டணத்தால் தற்போது ஒக்ரேன் 92 பெற்றோல் லீற்றருக்காக 05 ரூபாய் 85 சதமும், ஒக்ரேன் 95 பெற்றோல் லீற்றருக்காக 07 ரூபாய் 50 சதமும், ஒட்டோ டீசல் லீற்றருக்காக 05 ரூபாய் 80 சதமும், சூப்பர் டீசல் லீற்றருக்காக 06 ரூபாய் 96 சதம் பணமும் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளதாக இதன்போது தெரியவந்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை பிரிவால் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கான சுற்றறிக்கையை 08 வருடங்களுக்கும் மேலாக வழங்குவதில் வேண்டுமென்றே காலதாமதம் செய்ததன் காரணமாக, 2014 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 3,416 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், இதன்படி கூட்டுத்தாபனத்திற்கு பாரியளவான மோசடி செய்துள்ளமை தொடர்பில் விற்பனை பிரிவு பொறுப்பு கூற வேண்டும் எனவும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் தெரியவந்துள்ளது.

கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் இதுபோன்ற மோசடிகளில் ஈடுபடுவது குறித்து அதிருப்தியை வெளிப்படுத்திய கோப் குழுவின் உறுப்பினர்கள், இந்த மோசடிகளுக்கு கூட்டுத்தாபனத்தின் உள்ளக அதிகாரிகளே பொறுப்பு கூற வேண்டும் என சுட்டிக்காட்டியது.

இது தொடர்பில் கூட்டுத்தாபனம் எடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் வந்திருந்த அதிகாரிகளிடம் கோப் குழு கேள்வி எழுப்பியது.

இதன்படி, மோசடியில் ஈடுபட்டவர்களின் பெயர் பட்டியல் மற்றும் அந்த அதிகாரிகளின் முறைகேடுகள் குறித்து கூட்டுத்தாபனம் எடுத்த நடவடிக்கைகள் அடங்கிய அறிக்கையை 7 நாட்களுக்குள் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கோப் குழு பரிந்துரை செய்துள்ளது. (அ)

# கையடக்கத் தொலைபேசி சிம்களை பயன்படுத்தி மோசடி

கொழும்பு, ஜூன் 22

பிறரின் கையடக்க தொலைபேசி சிம் அட்டைகளை பயன்படுத்தி இலட்சக்கணக்கில் பண மோசடி செய்த சந்தேக நபரை ஜூலை 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபரான ஹற்றனைச் சேர்ந்தவர், குற்றப் புலனாய்வுப் பிரிவின் சைபர் குற்றவியல் கண்காணிப்புப் பிரிவினரால் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட பிரதம நீதவான் திலின கமகே, வழக்கு விசாரணைகளை ஜூலை 4ஆம் திகதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷவுடன் ஏ.ஏ.எல். ஜயரத்ன ராஜா சந்தேக நபருக்காக நீதிமன்றில் ஆஜரானார்கள். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதி நீதிவான்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு

நிந்தவூர், ஜூன் 22

**நாடளாவிய ரீதியில் சேவையில் ஈடுபட்டுள்ள காதி நீதிவான்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு அதிகரிப்பு 2025 ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளதாக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமுக்கு நீதி அமைச்சின் செயலாளர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.**

நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட மேல் நீதிமன்ற வலயங்களுக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தின் பிரகாரம், முஸ்லிம்களின் விவாகப் பிணக்குகளை விசாரித்து தீர்வுகளையும், தீர்ப்புகளையும் வழங்குவதற்கென நீதிச் சேவை ஆணைக்குழுவால் காதி நீதிவான்கள் நியமிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக 15 ஆயிரத்துக்கும் குறைவாகவே கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

ஜூரிகள் (நடுவர்கள்) மற்றும் விவாக பிணக்குகள் சம்பந்தமாக சமரசம் செய்து வைக்கும் ஆலோசகர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இது பகுதி நேரப் பணியாக மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் கூட, வாரந்தோறும் இதற்கான வெவ்வேறுவிதமான விண்ணப்பங்களையும், முறைப்பாடுகளையும் பொறுப்புணர்ச்சியுடன் பல நாட்கள் அலசி ஆராய்ந்து மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் காதி நீதிவான்களுக்கு இது வரை வழங்கப்பட்டுவரும் கொடுப்பனவு எந்தவிதத்திலும் போதுமானதல்ல என்பதனால், அவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை தற்போது வழங்கப்படுகின்ற தொகையை விடவும் மூன்று மடங்குகளாக அதிகரித்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ரவூப் ஹக்கீம் நீதி அமைச்சுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கமைவாகவே நீதி அமைச்சின் செயலாளரால் காதி நீதிவான்களுக்கான மாதாந் தக் கொடுப்பனவுகள் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு, அதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ- 06)



# பொத்துவில் ஆதார மருத்துவமனை சிற்றுண்டிச்சாலையில் பரிசோதனை

பொத்துவில், ஜூன் 22

பொத்துவில் சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயத்துக்குட்பட்ட ஆதார மருத்துவமனைக்கு சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையிலான குழுவினர் சென்று பரிசோதனையில் ஈடுபட்டனர்.

சிற்றுண்டிச்சாலை மற்றும் சமையலறை சுற்றுச்சூழல் என்பன இதன்போது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

சிற்றுண்டிச்சாலை திருப்திகரமாக காணப்பட்ட போதிலும் சிறுசிறு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டு அவற்றை திருத்தியமைக்க கால அவகாசம் வழங்கப்பட்டது. (எ)

# இராமகிருஷ்ண மிஷன் ஏற்பாட்டில் கல்லடியில் சர்வதேச யோகா தினம்



கல்லடி, ஜூன் 22

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் விவேகானந்தா மனித வள மேம்பாட்டு நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச யோகா தினம் நேற்று வெள்ளிக்கிழமை காலை கல்லடி சிவானந்த வித்தியாலய மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சிறீ மத் சுவாமி நீலமாதவானந்தா முன்னிலையில் இந்த நிகழ்வு காலை 6 மணி முதல் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி நவரூபரஞ்சனி முகுந்தன் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் மருத்துவர் இரா. முரளீஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.

இந்த யோகா பயிற்சியை பயிற்றுவிப்பாளர்களான சிவலிங்கம் சிறீதரன், அழகுராஜா ஜெயகரன் ஆகியோர் நடத்தினர்.

சுமார் 250 பேர் யோகா பயிற்சியை காலை 6 மணி முதல் ஏழு மணி வரை சூரிய ஒளியில் பெற்றனர்.

(எ)

# கல்முனை கார்மேல் பற்றிமா பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு மருத்துவ முகாம்






கல்முனை, ஜூன் 22

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் அதிபர், ஆசிரியர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான மருத்துவ முகாம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

கல்முனை ஆதார மருத்துவமனையின் பணிப்பாளர், மருத்துவர் எஸ். சந்திரசேன, திட்டமிடல் பிரிவு பொறுப்பு மருத்துவ அதிகாரி ஜே. மதன் மற்றும் கல்முனை ஆதார மருத்துவமனையின் மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் உள்ளிட்ட குழுவினர்கள் மருத்துவ முகாமை நடத்தினர்.

இதன்போது, பாடசாலையில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் ,உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சுமார் 80 பேருக்கான தொற்றா நோய் நிலை பரிசோதனைகள் மற்றும் பற் சுகாதார பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், அவர்களுக்கான சுகாதார போதனைகள் மற்றும் விழிப்புணர்வுகளும் வழங்கப்பட்டன. (எ)

# பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம் சம்பியன்




சாய்ந்தமருது, ஜூன் 22

புனித ஹஜ் பெருநாளை முன்னிட்டு சாய்ந்தமரு பிளாஸ்டர் விளை யாட்டுக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் கடின பந்து “நாபீர் பௌண்டேஷன் சம்பியன் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி சாய்ந்தமருது பொலிவேரியன் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மட்டுப்படுத்தப்பட்ட 10 ஓவர்களைக் கொண்டதாக இந்தச் சுற்றுப் போட்டி நடைபெற்றது. நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சம்பியனாக சாய்ந்தமருது பிளாஸ்டர் அணி தெரிவு செய்யப்பட்டது.

இந்த இறுதிப் போட்டியில் கல்முனை ஜூனியர்ஸ் விளையாட்டுக் கழகமும் சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகமும் தெரிவு செய்யப்பட்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கல்முனை ஜூனியர்ஸ் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 9 விக்கெட்களை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றனர்.

73 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிளாஸ்டர் அணியினர் நிர்ணயிக்கப்பட்ட வெற்றி இலக்கை 8. 5 ஓவர்களில் 4 விக்கெட்களை மட்டும் இழந்து சம்பியனாகினர். (எ)

# சிறுவர் அபிவிருத்தி மற்றும் உள சுகாதார குழுக் கூட்டம்

சம்மாந்துறை, ஜூன் 22

சம்மாந்துறை பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி மற்றும் உள சுகாதார குழுக் கூட்டம் நேற்று முன்தினம் உதவி பிரதேச செயலாளர் யூ. எம். அஸ்லம் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சிறுவர்களின் உரிமை மேம்பாடு, பெண்கள் உரிமைகள், சிறுவர் உரிமை மீறல், உளவள சார் நடவடிக்கைகள் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் சம்மந்தமாக துறைசார் பிரதிநிதிகளிடம் கலந்தாலோசிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை ஆதார மருத்துவமனையின் உள நல மருத்துவ நிபுணர் கதூன் கடுவல, கிராம உத்தியோகத்தர் எம். எஸ். எம் நளீர், சமூக சேவை பிரிவு பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி ஏ. யூ. பசீல், உளவள துணை உத்தியோகத்தர் கே. தயாளினி, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களான எம். ஐ. எம். ஹரீமா, ஏ. ஜே. குறைசா, பொலிஸ் உத்தியோகத்தர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார அதிகாரி, வலயக் கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




வறுமைக்குட்பட்ட குடும்பங்களில் இரட்டை குழந்தைகளைப் பெற்றெடுத்த குடும்பத்துக்கு வாழ்வாதார உதவிக்கான காசோலையும் வழங்கி வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹமாஸ் போராளிகளை முற்றாக அழிக்க முடியாது

## பிரதமர் நெதன்யாகுவுக்கு எதிராக திரும்பியது இஸ்ரேல் இராணுவம்

டெல் அவிஸ், ஜூன் 22

**ஹமாஸ் போராளிகள் அமைப்பை ஒருபோதும் முற்றாக அழிக்க முடியாது. அவ்வாறு கூறுவது மக்களை ஏமாற்ற அரசியல் தலைவர்கள் போடும் நாடகம் என்று இஸ்ரேல் இராணுவப் பேச்சாளர் ரியர் அட்மிரல் டானியல் ஹகாரியே தெரிவித்துள்ளார்.**



ஹமாஸ் அமைப்பை அழிக்கலாம். அதனை காணாமல் போகச்செய்யலாம் என்ற எண்ணம் எங்கள் நாட்டின் அரசியல் தலைவர்கள் மற்றும் படைத்தரப்பினர் இடையே காணப்படுகின்றது. ஆனால், இது மக்களின் கண்ணில் மண்ணை தூவுவது போன்றது.

இஸ்ரேலின் சனல் 13 தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஹகாரியின் இந்த கருத்துக்கு இஸ்ரேல் பிரதமரின் அலுவலகம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை ஹமாஸ் அமைப்பை எவ்வாறு அழிப்பது என தீர்மானித்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ள பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவகம் காஸா யுத்தத்தின் நோக்கமாக இஸ்ரேல் இதனைக் கருதுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இஸ்ரேலிய இராணுவம் இது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளது எனவும் பிரதமரின் அலுவலகம் தெரிவித்துள்ளது. இதேவேளை, இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் தாங்கள் ஹமாஸை அழிப்பது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் ஹமாஸ் என்ற கொள்கை குறித்தே தெரிவித்தார் எனவும் விளக்கமளித்துள்ளது.

இராணுவப் பேச்சாளரின் கருத்தால் உருவாகியுள்ள சர்ச்சையை தணிக்கும் விதத்தில் இஸ்ரேலிய இராணுவம் கருத்து வெளியிட்டுள்ள போதிலும், அவரது கருத்து இஸ்ரேலிய பிரதமருக்கும் இராணுவத்துக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் தீவிரமடைவதை வெளிப்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ)



# ஜப்பானில் மழைக்கு நடுவே சர்வதேச யோகாசன நிகழ்வு

டோக்கியோ, ஜூன் 22

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் மழைக்கு நடுவே 10 ஆவது சர்வதேச யோகாசன நிகழ்ச்சி நடைபெற்றது.

யோகாவை அங்கீகரிக்கும் வகையில் ஆண்டு தோறும் ஜூன் 21 ஆம் திகதி சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுகிறது. இதன்படி 10 ஆவது யோகா தினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி யோகா தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நாடுகளில் நேற்று யோகாசன நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

அந்த வகையில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இந்தியத் தூதரகத்தின் சார்பில், அங்குள்ள சுக்ஜி ஹாங்வான்ஜி கோவிலில் யோகா நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்படி நேற்றுக்காலை நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் தூதரக அதிகாரிகள், ஜப்பானில் வசிக்கும் இந்தியர்கள் மற்றும் ஜப்பான் மக்கள் பலர் கலந்துகொண்டனர். இந்த நிகழ்ச்சியின்போது மழை பெய்ததால், அங்கு வந்திருந்தவர்கள் குடைகளைப் பிடித்தவாறு யோகாசனம் செய்தனர்.





# வெப்ப அலை தாக்கி 192 பேர் உயிரிழப்பு!

புதுடில்லி, ஜூன் 22

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் வெப்ப அலையின் தாக்கத்தை தாக்குப்பிடிக்க முடியாமல் வீடற்ற நிலையில் வீதியோரங்களில் வசித்து வந்த குடும்பங்களைச் சேர்ந்த 192 பேர் உயிரிழந்ததாக தன்னார்வ அமைப்பு தெரிவித்துள்ளது. (எ)

# இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் 10 பலஸ்தீனியர்கள் உயிரிழப்பு

ரபா, ஜூன் 22

ரபாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 10 பலஸ்தீனிய படையினர் உயிரிழந்தனர். இதேவேளை, இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து இஸ்ரேல் இராணுவம் இதுவரை எந்தவொரு கருத்தையும் வெளியிடவில்லை.

ஹமாஸ் அமைப்பினரின் தாக்குதலுக்கு பதிலடியாக, காஸாவில் இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. எகிப்து எல்லையில் அமைந்துள்ள ரபா நகரத்தில் ஹமாஸ் அமைப்பினர் பதுங்கியிருப்பதாகவும், அங்குள்ள பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு அறிவுறுத்தியிருந்தார்.



எனினும், ரபாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்தும் தாக்குதல்களுக்கு பொதுமக்கள் பலியாகின்றனர்.

இந்த நிலையில், ரபா நகரின் கிழக்கு பகுதியில் வணிகப் பொருட்களைப் பாதுகாக்கும் பாதுகாப்புப் பணியாளர்களின் குழுவை நோக்கி இராணுவம் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் லொறிகளில் பாதுகாப்பு பணியில் இருந்த 10 பலஸ்தீன படையினர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# வடகொரியாவுக்கு ரஷ்ய ஆயுதங்கள்

## அமெரிக்கா கவலை

வாஷிங்டன், ஜூன் 22

வடகொரியாவுக்கு ரஷ்யா ஆயுதங்களை வழங்கும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்துள்ளமை குறித்து அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது.

வடகொரியாவுக்கு சென்ற விளாடிமிர் புடின் வெளியிட்டுள்ள இந்தக் கருத்து ஆழ்ந்த கரிசனையை ஏற்படுத்தியுள்ளது என அமெரிக்க இராஜாங்க திணைக்களப் பேச்சாளர் மத்தியூ மில்லர் தெரிவித்தார்.

வடகொரியாவுக்கு ரஷ்ய வழங்கவுள்ள ஆயுதங்கள் கொரிய தீபகற்பத்தை பலவீனப்படுத்தும். ஸ்திரமிழக்கச் செய்யும் எனக் குறிப்பிட்டுள்ள மில்லர் ரஷ்யா வழங்கும் ஆயுதங்களைப் பொறுத்து அது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை மீறும் நடவடிக்கையாக அமையும். எனவே, ரஷ்யாவே தனக்கு எதிராக உலக நாடுகளை அணி திரட்டும் வேலையை செய்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ரஷ்யாவும் வடகொரியாவும் கைச்சாத்திட்ட பாதுகாப்பு உடன்படிக்கை கொரிய தீபகற்பத்தின் பாதுகாப்பு, அமைதிக்கு மிகவும் அச்சுறுத்தலானது என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அலுவலகமும் தென்கொரிய வெளிவிவகார அமைச்சும் தெரிவித்துள்ளன. (எ)

# 1000 யாத்திரிகர்கள் பலி!

ரியாத், ஜூன் 22

கடும் வெப்பத் தாக்கத்தால் நடப்பு ஆண்டில் ஹஜ் புனித யாத்திரை மேற்கொண்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் இதுவரை உயிரிழந்த தாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

# 91 அகதிகளை மீட்டது மொராக்கோ கடற்படை

ரபாத், ஜூன் 22

அட்லாண்டிக் கடற்கரை அருகே 91 அகதிகளை மொராக்கோ கடற்படையினர் மீட்டனர்.

வடக்கு ஆபிரிக்க நாடுகளிலிருந்து வேலைவாய்ப்பு தேடி ஏராளமான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர். இவ்வாறு செல்பவர்கள் அட்லாண்டிக் பெருங்கடல் வழியாக சிறிய படகுகளில் ஆபத்தான பயணங்களை மேற்கொள்கின்றனர். மேலும் சிலர் மொராக்கோ வழியாக ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைகின்றனர்.

இந்த நிலையில் வடமேற்கு ஆபிரிக்காவில் உள்ள கேனரி தீவுகளை நோக்கி சென்றுகொண்டிருந்த படகு ஒன்றை அட்லாண்டிக் கடற்கரை அருகே மொராக்கோ கடற்படையினர் தடுத்து நிறுத்தினர். அந்த படகில் சுமார் 91 அகதிகள் இருந்தது தெரியவந்தது. அவர்களை மீட்ட கடற்படையினர் அவர்களை மொராக்கோ பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகாரைகளின் பாதுகாப்புக்கு 50, 000 பொலிஸார் களமிறக்கம்

கொழும்பு, ஜூன் 22

**பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள 11, 100 விகாரைகளின் பாதுகாப்புக்காக 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் மற்றும் அதிரடிப் படையினர், இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.**

இதன்படி , 47 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள், 400 பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் 700 இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மிஹிந்தலை, சிறீ மகாபோதி, அதமஸ்தான், தந்திரிமலை, அவுகன, விஜிதபுர மற்றும் நாமல் உயன ஆகிய விகாரைகளுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

மேலும் , அநுராதபுர நீர்த் தேக்கங்களில் குளிக்கும் மக்களின் பாதுகாப்புக்காக 400 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், அநுராதபுரம் விகாரைகளுக்கு அருகில் 4,000 இற்கும் அதிகமான பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

# ஜீப் - மோ. சைக்கிள் மோதியதில் குழந்தையும் தாயும் படுகாயம்!



மொனராகலை, ஜூன் 22

பிபில - மொனராகலை வீதியில் கனுல்வெல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 3 வயது குழந்தையும் தாயும் படுகாயமடைந்தனர்.

ஜீப் ஒன்று மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த குழந்தையும் பெண்ணொருவரும் பிபில மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)

# ஆபாச காணொலிகளை அனுப்பிய முன்னாள் கடற்படை அதிகாரி கைது

கொழும்பு, ஜூன் 22

இரு பெண் கடற்படையினருக்கு வட்ஸ்அப் மூலம் ஆபாச காணொலிகளை அனுப்பியதாகக் கூறப்படும் முன்னாள் கடற்படை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டதாகக் கணனி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இனந்தெரியாத நபரொருவர் தனது தொலைபேசியின் வட்ஸ்அப் இலக்கத்துக்கு ஆபாச காணொலிகளை அனுப்பி தன்னைப் பாலியல் ரீதியான நடவடிக்கைகளுக்கு அழைப்பதாகப் பெண் கடற்படை உத்தியோகத்தர் ஒருவர் கணனி குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இதேபோன்று மற்றுமொரு பெண் கடற்படை உத்தியோகத்தரும் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இந்த இரண்டு முறைப்பாடுகளுடனும் தொடர்புடையவர் ஒரே நபர் என தெரிய வந்ததையடுத்து, சந்தேக நபர் பலப்பிட்டிய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான முன்னாள் கடற்படை அதிகாரி பயன்படுத்தியதாகக் கூறப்படும் கையடக்கத் தொலைபேசியும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ)

# ஜூலை 10 ஆம் திகதி வரையே ஏ. எல். விண்ணப்பம் ஏற்கப்படும்

கொழும்பு, ஜூன் 22

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்துக்கான திகதியை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, ஜூலை 10 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச். ஜே. எம். சி. அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர்கள் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic மற்றும் உத்தியோகபூர்வ கையடக்கத்தொலைபேசி செயலியான “DoE” இனைப்பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம்.

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் விண்ணப்பதாரிகள் அந்தந்த பாடசாலை தலைமையாசிரியரிடம் அனுமதி பெற்ற பின்னரே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எக்காரணம் கொண்டும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கால அவகாசம் நீடிக்கப்படமாட்டாது என்றும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ)

# மின் கம்பம் தவறி வீழ்ந்ததில் மின்சார சபை ஊழியர் பலி!

நுவரெலியா, ஜூன் 22

நுவரெலியா ஹங்குரன்கெத்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மின் கம்பம் வீழ்ந்து மின்சார சபை ஊழியர் ஒருவர் உயிரிழந்தார்.

வியாழக்கிழமை பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அம்பகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயது மின்சார சபை ஊழியரே இவ்வாறு உயிரிழந்தார்.

மின்சார சபைக்குச் சொந்தமான லொறி ஒன்றில் ஏற்றிச் சென்ற மின் கம்பம் ஒன்றை லொறியிலிருந்து இறக்க முயன்ற போது மின் கம்பமானது மின்சார சபை ஊழியரின் மீது தவறி வீழ்ந்தது.

இதனையடுத்து, காயமடைந்த ஊழியர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக ஹங்குரன்கெத்த மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# பாதாள உலக கும்பலை சேர்ந்தவர் வெளிநாட்டு துப்பாக்கியுடன் கைது

கொழும்பு, ஜூன் 22

தென் மாகாணத்தில் இரண்டு கொலைகளை செய்து, மேலும் இரண்டு கொலைகளை செய்வதற்கு பணம் பெற்றுக்கொள்ள முயற்சித்த பாதாள உலக கும்பலைச் சேர்ந்த சந்தேக நபரொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.



குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் விசேட குழுவினால் பல்வேறு பிரதேசங்களில் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது சந்தேக நபர் அம்பலாங்கொடை, வத்துகெதர பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட அனுமதிப் பத்திரமற்ற ரிவோல்வர் வகை துப்பாக்கி ,12 தோட்டாக்கள் மற்றும் 10 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. (எ)

# தமிழகத்துக்குள் நுழைந்த இரு இலங்கையர்கள் கைது

தனுஷ்கோடி, ஜூன் 22

இலங்கையிலிருந்து கடல் வழியாக சட்டவிரோதமாக தமிழகத்துக்குள் நுழைந்த இரு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தின் இராமேஸ்வரத்தை அடுத்த தனுஷ்கோடி கம்பிப்பாடு தெற்கு கடற்கரை பகுதியில் இலங்கையைச் சேர்ந்த பைபர் படகு ஒன்றில் இருவர் வந்திறங்கியுள்ளனர்.

இவ்வாறு வந்திறங்கியவர்கள் தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற இராமேஸ்வரம் மரைன் பொலிஸார் இருவரையும் பிடித்து மண்டபம் மரைன் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில் அவர்கள் இருவரும் புத்தளத்தை சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. பொருளாதார நெருக்கடியால் இவர்கள் இருவரும் அகதிகளாக தமிழகத்துக்குள் தஞ்சமடைய வந்தார்களா? அல்லது கடத்தல் சம்பவங்களில் தொடர்புடையவர்களா? என்பது குறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. (எ)

# 289 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

கொழும்பு, ஜூன் 22

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு 289 கைதிகளுக்கு விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், சிறு குற்றங்களுக்காக சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த 289 கைதிகளுக்கு நேற்று விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி பி திஸாநாயக்க தெரிவித்தார். (எ)

# 6 மீனவர்களிடையே நடுக்கடலில் மோதல்

## ஒருவர் உயிரிழப்பு

பேருவளை, ஜூன் 22

பேருவளையிலிருந்து இழுவைப் படகில் மீன்பிடிக்கச் சென்ற ஆறு மீனவர்களுக்கிடையில் நடுக்கடலில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்தார்.

மாகல்கந்த பகுதியைச் சேர்ந்த எம். கே. உபுல் சந்தன (வயது 40 ) என்ற மீனவரே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோதல் சம்பவத்தில் ஏனைய மீனவர்களும் காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பேருவளை கடற்றொழில் பரிசோதகர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில் படகின் உரிமையாளர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்தவரின் சடலம் அதே படகில் பேருவளை மீன்பிடி துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

வேண்டுகோளுக்கு இணங்க, ஜெய்ப் பூர் மத்திய துப்பறியும் பயிற்சி நிறுவ னம் போன்ற முதன்மையான பொலிஸ் பயிற்சி நிறுவனங்களில் இலங்கை பொலிஸாருக்கு ஏற்ப திறன் வளர்ப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

ஏற்கனவே, 2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து, இளைய, நடுத்தர மற்றும் மூத்த அதிகாரிகள் உட்பட 60க்கும் மேற்பட்ட பொலிஸாருக்கு இந்தியாவில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது, குற்றங்கள், முகாமைத்துவம், செயற்கை நுண்ணறிவு மற்றும் இணையக் குற்ற விசாரணை, மற்றும் முக்கியஸ்தர் பாதுகாப்பு பயிற்சி போன்ற பல்வேறு பாடங்களில் உயர்தர பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்திய - இலங்கை தொழில்நுட்ப மற்றும் பொருளதார திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு 130க்கும் மேற்பட்ட இலங்கை பொலிஸ் அதிகாரிகள் இந்தியாவில் பயிற்சி பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## நெடுந்தீவில்...

ஏழாம் வட்டாரத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

பிரேதப் பரிசோதனையின் பின் வியாழக்கிழமை இரவு சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்ட நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை இறுதி கிரிகைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று அதன் பின்னர் நல்லடக்கத்திற்காக சேமக்காலைக்கு எடுத்துச் செல்லும் போது மக்கள் சடலத்தையும் தோள்களில் சுமந்தவாறு நெடுந்தீவு பொலிஸ் நிலையம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இளைஞர் கொலையுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர் ஒருவர் ஏற்கனவே வியாழக்கிழமை கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில் இக்கொலையுடன் சம்பந்தப்பட்ட ஏனைய மூவரையும் விரைவாகக் கைது செய்யுமாறு கோரி நெடுந்தீவு மக்கள் சடலத்துடன் சென்று நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது பொலிசாரின் அசமந்த போக்கைச் சுட்டிக்காட்டிய மக்கள் பொலிசாரிடம் வாய்த்தர்க்கத்திலும் ஈடுபட்டனர்.

அதன் பின்னர் கலைந்து சென்ற மக்கள் கொலை செய்யப்பட்ட இளைஞரின் சடலத்தை சேமக்காலையில் நல்ல டக்கம் செய்தனர். (அ)

## இந்தியா...

மிகவும் சிறப்பானதாக அமைந்ததாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் பதிவிட்டுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் தனது ஒரு நாள் விஜயத்தில், முதலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்திருந்ததுடன், அதன் பின்னர் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்து கலந்துரையாடினார்.

அத்துடன், இருநாட்டு வெளிவிவகார அமைச்சர்களை சந்தித்துக் கலந்துரையாடியதுடன், இதன்போது இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

அதன் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இதனையடுத்து, தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சந்தித்து நேற்று மாலை கலந்துரையாடியிருந்ததுடன் வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் மலையக அரசியல் பிரதிநிதிகளும் இதன் போது பிரசன்னமாகியிருந்தனர். (அ)

## ஜனாதிபதி...

வானமே இடிந்து தலைமேல் விழுந்தாலும் ஜனாதிபதித் தேர்தலை மட்டும் பிற்போட முடியாது. தேர்தலுக்கான முதற்கட்ட வேலைத்திட்டங்கள் தற்போது தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

அதுகுறித்து நாம் ஆராயப்போவதில்லை. அதற்கான உரிமையும் எமக்கு இல்லை.

அத்துடன், தேர்தல்கள் ஆணைக்குழு அதன் கடமைகளை, உண்மையுடனும், நேர்மையுடனும் செய்யும் என கண்காணிப்பு அமைப்பு என்ற வகையில் நாம் நம்புகின்றோம்.

தற்போது மக்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. இதனை சில கட்சிகளை தமக்கு சாதகமாக பயன்படுத்தி வாக்கு வேட்டையில் ஈடுபடுவதைத் தடுக்கவேண்டும்.

தேர்தல் காலத்தில் இவ்வாறான அபிவிருத்திகள் கட்சி சார்ந்து முன்னெடுக்கப்படுவதை கண்காணிப்பு அமைப்புகள் கவனத்தில் எடுக்கவேண்டும் - என்றார். (அ)

## ராஜபக்ஷக்கள்...

இது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பஸில் ராஜபக்ஷ இடையிலான சந்திப்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட மொட்டுக்கட்சியின் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் சுதந்திர கட்சியின் சில அங்கத்தவர்கள் கலந்து கொண்டதாகவும், இந்த செயற்பாடானது திருப்திகரமானதாக அமையவில்லை என பஸில் ராஜபக்ஷ எடுத்துரைத்துள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதியுடனான சந்திப்பானது அவர் விடுத்த அழைப்பின் பேரிலேயே முன்னெடுக்கப்பட்டதாகவும் ராஜபக்ஷக்கள் எவருக்கும் அடிபணிய தயாரில்லை எனவும் கடுமையான கருத்துக்களை பசில் இதன் போது முன்வைத்துள்ளார்.

எனினும் மொட்டுக் கட்சியினரையோ, வேறு கட்சியினரையோ இணைத்துக்கொள்வது ஜனாதிபதியின் தனிப்பட்ட அரசியல் முயற்சியாக இருந்தாலும் ராஜபக்ஷக்கள் இல்லாத எந்த ஒரு கூட்டணிக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை என பசில் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். (அ)

## மன்னார் பிரதான...

சாவடியை அகற்றுமாறும் குறித்த சோதனை சாவடியினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்கள்,சிவில் செயற்பாட்டாளர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் போராட்டங்களை முன்னெடுத்ததுடன்,சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு சோதனை சாவடியை அகற்றுவதற்கான கோரிக்கையை கடிதங்களாகவும் மகஜர்களாகவும் வழங்கியிருந்தனர்.

இந்த நிலையில் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற விசேட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் குறித்த சோதனை சாவடியை அகற்றி தருமாறு நேரடி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக நேற்று குறித்த பாலப் பகுதியில் காணப்பட்ட வீதி தடைகள் அகற்றப்பட்டுள்ளதுடன் சோதனை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இருப்பினும் அப்பகுதியில் இராணுவம் தொடர்ச்சியாக நிலை கொண்டுள்ளதுடன் இராணுவ கட்டுமாணங்கள் எவையும் அகற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வாளுடன் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 22

இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்கிளை வைத் திருந்த இளைஞனிடம் இருந்து, 5 வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், மானிப்பாய், நவாலி பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவரே நேற்றுக் காலை யாழ்.பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட் டார்.

விசாரணையின் போது அவரது வீட்டில் அழிக்கப் பட்ட ஒரு வகை மோட்டார் சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, அவரது வீட்டில் மறைத்து வைக்கப்பட் டிருந்த வெவ்வேறு அளவுகளில் 05 வாள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (அ)

# கிளிநொச்சியில், பொசன் தின நிகழ்வு

கிளிநொச்சி, ஜூன் 22

கிளிநொச்சியில், இராணுவத்தின் ஏற்பாட்டில், பொசன் தின நிகழ்வு, நேற்று இரவு இடம்பெற்றது.

55 ஆவது காலாட் படை பொறுப்பதிகாரி, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவின் பிரதி பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர், அனைத்து அதிகாரிகள் மற்றும் ஏனைய படைபிரிவின் அனுசரணையுடன், பொசன் நிகழ்வு, 55 ஆவது காலாட்படை பிரிவுக்கு முன்பாக இடம்பெற்றது.

இதன் போது, சுமார் 500 மேற்பட்ட மக்கள், தானத்தை பெற்றுக்கொண்டனர்.

## மன்னார்...

முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதும் பயனளிக்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் மன்னார் விஜயம் எதற்கானது என்று கூட தெரியவில்லை. வடக்கில் உள்ள பல்வேறு வளங்களை எவ்வாறு அன்னியர்களின் கையளித்து எவ்வாறு இந்த நாட்டிற்கான வருவாயை பெற்றுக்கொள்ளலாம் என்பதே இதன் பிரதான காரணமாக உள்ளது.

நிலமாக இருந்தாலும் சரி கடலாக இருந்தாலும் சரி இந்த இரண்டையும் மையப்படுத்தியதாக காணப்படுகின்றது.

கடலில் இருக்கின்ற அனைத்து வளங்களும் இந்தியாவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. காற்றாலையாக இருந்தாலும் சரி கணிய மணல் அகழ்வாக இருந்தாலும் சரி இந்தியாவிடம் கையளிக்கப்பட்டு விட்டது.

நாங்கள் கடற்றொழிலாளர்களின் பிரச்னையை கதைப்பதற்காக மாத்திரமே ஜனாதிபதியை சந்திக்க சந்தர்ப்பம் கோரினோம். எந்த அபிவிருத்திக்கும் நாங்கள் தடையானவர்கள் இல்லை. எமது வாழ்வாதார பிரச்னையை கதைப்பதற்கு அவரை அணுகுகின்ற போது அவர் அதை தட்டிக் கழிக்கின்றார் - என்றார். (அ)

## சரத் பொன்சேகா...

தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவை சிறந்த போர் வீரர் என ஐக்கிய மக்கள் சக்தி கௌரவித்த போதும் சிரேஷ்ட தலைவர்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார் என விதானகே சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவை கடுமையாக விமர்சிப்பது பொருத்தமான விடயம் அல்ல எனவும், கட்சியில் தொடர முடியாவிட்டால் உடனடியாக வெளியேறுமாறும் தெரிவித்துள்ளார். (அ)

## ஜப்பான்...

கப்பல், நாட்டிற்கான விஜய மொன்றை மேற்கொண்டு நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததுள்ளது.

இரண்டு நாட்களுக்கு இந்த கப்பல் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும் என இலங்கை கடற்படை அறிவித்துள்ளது. (அ)

## இந்தியாவை...

அசையாது.

இதுதான் உண்மை, யதார்த்தம். இதனை விமல் வீரவன்ஸ போன்ற இனவாத சிந்தனையுடையவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான வினோநோகராத லிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை( இடம்பெற்ற பெண்கள் வலுவூட்டல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்-

இலங்கைக்கு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்ஷங்கர் ஒரு நாள் விஜயமாக வருகை தந்துள்ளார். அவரது விஜயத்தை கண்டு இந்த பாராளுமன்றத்திலுள்ள சிலர் அச்சப்படுகின்ற, சந்தேகப்படுகின்ற நிலைமையைக் காணக்கூடியதாகவுள்ளது.

பொதுவாக இந்தியா என்று சொன்னால் தமிழில் ஒரு பழமொழி உள்ளது. அது வேண்டாப்பொண்டாட்டி கைபட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம் என்பது. அதுபோன்றுதான் இங்கே இருக்கின்ற சிலர் குறிப்பாக இனவாத பார்வை பார்க்கின்ற அரசியல் பிரதிநிதிகள் இந்தியாவுக்கு எதிராக கொக்கரிக்கத்தொடங்கி விட்டார்கள்.

இந்திய வெளியுறவுத்துறை அமைசசர் ஜெய்சங்கரைக்கண்டு இவர்களுக்கு அச்சம், சந்தேகம் என்று சொன்னால் விரைவில் இலங்கை வரவிருக்கின்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை பார்த்து எந்தளவுக்கு அச்சம் கொள்ளப் போகின்றனர் என்பதை நாங்கள் சொல்லத்தேவையில்லை.

இந்தியா எமது அயல் நாடு. ஆபத்துக்கு உதவிய நாடு. தொடர்ந்தும் உதவிக்கொண்டு இருக்கின்ற நாடு. எந்த ஆபத்துக்கும் எதிர்காலத்தில் உதவி செய்யக்கூடிய நாடு. அவ்வாறான நாட்டின் பிரதிநிதிகள் இங்கு வருகின்றபோது எதற்காக இப்படி கூக்குரலிடுகின்றார்கள்? அவர்கள் ஒரு நல்ல நோக்கத்துக்காக, இலங்கைக்கு உதவ வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையோடு வருகின்ற வேளையில் வேறு கண்ணோட்டத்தோடு பார்க்கின்ற இவர்களினால்தான் சிங்கள மக்கள் கூட இந்தியாவை ஒரு எதிரி நாடாக பார்க்கின்ற சூழல் இருக்கின்றது.

இந்த சபையில் கூட இன்று விமல் வீரவன்ஸ, ஜெய்ஷங்கர் ஏன் வருகின்றார்? அவரின் நோக்கம் என்ன? அவரின் பின்னால் மறைமுக கரங்கள் உள்ளனவா? என்று கேள்வி எழுப்புகின்ற அளவுக்கு இந்தியாவுக்கு எதிரான நிலைமை இருக்கின்றது. இவ்வாறு இவர்கள் தவறாக சிங்கள மக்களை வழிநடத்துவதனால் தான் சிங்களமக்களும் இந்தியாவை எதிரியாக பார்க்கின்றார்கள். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

ன்எங்களை பொறுத்தவரையில் இந்தியாவை மீறி எந்தவொரு நாடும் இலங்கைப் பிரச்சினையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையில் அல்லது அபிவிருத்தி, பொருளாதாரம் சார்ந்த விடயங்களில் முதலில் தலையிட முடியாது. அவ்வாறு தலையிடுவதா னால் அது இந்தியாவுக்கு பின்னர்தான், இந்தியாவுக்குத்தான் முதலிடம். இந்தியாவை மீறி இங்கு எதுவுமே அசையாது.

இதுதான் உண்மை, யதார்த்தம். இதனை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே இந்தியாவின் தலை வர்கள் வருகின்றபோது அதற்கு எதிராக கருத்துகள் கூறுவதனை, சந்தேகிப்பதை விமல் வீரவன்ஸ போன்ற இனவாத சிந்தனையுடையவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களை தடுக்க தவறியவர்களே ஜே.வி.பியில்!

## மகேஷ் சேனாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 22

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறிய பொலிஸ் துறையை சேர்ந்த இரண்டு அதிகாரிகள் தற்போது ஜே.வி.பியுடன் இணைந்துள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதியும், பாதுகாப்புப் பதவி நிலை பிரதானியுமான ஜெனரல் மஹேஷ் சேனாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் என்.பி.பி என்ற ஒரு அமைப்பு இல்லை. அது ஜே.வி.பியைத்தான் குறிப்பிடுகின்றது.

என்.பி.பி என்பது பொய்யான கூட்டணி. பொலிஸ் அதிகாரிகள் தீவிரவாதிகளுக்கு துணை போவது இலங்கை பொலிஸ்துறைக்கு ஏற்பட்டுள்ள அவமானமாகும்.

155 வருடங்கள் பழையாமையான பெருமையை கொண்ட துறையே இலங்கை பொலிஸ்துறை உலகில் ஸ்கொட்லாந்து நாட்டு பொலிஸ்துறையை விட மிகவும் எமது பொலிஸ் துறையே, சக்தி வாய்ந்தது. நான், முன்னாள் இராணுவ தலைமை அதிகாரி என்ற வகையில், சில விடயங்களை குறிப்பிட விரும்புகிறேன்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக, வெவ்றோரு நாடுகள் இலங்கை பொலிஸாருக்கு முன்தாகவே தகவல் வழங்கியுள்ளது.

இரகசிய பொலிஸ் துறையான சி..ஐ.டிக்கும், இவ்வாறு தகவல் வழங்கப்பட்டது. இந்த விடயம், இரகசிய பொலிஸ் துறையில் பணியாற்றும் பொலிஸ் அத்தியட்சகரும் அவருடன் பணியாற்றும் இரண்டு அதிகாரிகளும் வெளிக் கொணர்ந்தனர்.

இது இவ்வாறு இருக்க உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்திற்கு முன்னதாக மாவனெல்ல பிரதேசத்தில் புத்தர் சிலை ஒன்று உடைக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் குறித்த விசாரணைகளை நடத்தியதும் ஜேவிபியுடன் இணைந்துள்ள இந்த அதிகாரிகளே. பாராளுன்ற உறுப்பினர், கபீர் ஹாசீமின் செயலாளர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இது குறித்தான விசாரணைகளையும் நடத்தியவர்களும் இவர்கள் தான். வண்ணாத்திவில்லுப் பிரதேசத்திலும் பாரியளவிலான ஆயுதங்கள் மீட்டப்பட்டன.

அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டவர்களும் இந்த அதிகாரிகளே.

இத்தனை குற்றச் சம்பவங்கள் நடந்தும் குறித்த அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காமல் அசமந்தப் போக்கில் இருந்தமையினாலேயே ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டது.

ஆகவே இந்த விவகாரம் குறித்து, சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் சோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும்.

எனினும் இதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவே குறித்த அதிகாரிகள் இருவரும் தற்போது ஜே.வி.பியுடன் இணைந்துள்ளார்கள் - என்றார். (அ)

---

# குருநகரில் ஐவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணம் குருநகரில் பொலிஸார் நடத்திய விசேட சுற்றிவளைப்பு சோதனையின்போது ஐவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணப் பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த கைது நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பொசன் தினத்தில் மதுபானங்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவரும் ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவரும், கஞ்சா கலந்த மாவாவுடன் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது 19 மதுபான போத்தல்கள், 70 மில்லி கிராம் ஹெரோயின், 80 கிராம் கஞ்சா கலந்த மாவா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

---

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்பு சேவை பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 22

தாதியர்களின் பற்றாக்குறை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்பு சேவைகளை பேணுவதில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் மன்றத்தின் தலைவரும், வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளருமான வைத்தியர் ருக்ஷான் பெல்லான தெரிவித்துள்ளார்.

அதன்படி நோயாளர் பராமரிப்பு சேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் தாதியர் சேவைகள் இன்மை தொடர்பிலும், 10 வருடங்களாக அந்தச் சேவைகளுக்கான பயிற்சி மற்றும் பதவி உயர்வுகள் இன்மையும் இந்த சேவைப் பிரச்னைகளை ஏற்படுத்தியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்தக் குறைபாடுகள் காரணமாக வெளி வைத்தியசாலைகளில் இருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக மாற்றப்பட்டு வெளியில் இருந்து சிகிச்சை பெற வரும் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சுமார் 400 தாதியர்கள் மற்றும் சுமார் 500 வைத்தியர்கள் பற்றாக்குறை உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

---

# 2024 க.பொ.த உயர்தரப் பரீட்சாத்திகள் இணையவழி முறை மூலம் சமர்ப்பிக்கலாம்

கொழும்பு, ஜூன் 22

2024ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 25ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 20ஆம் திகதி வரை நடாத்த திட்டமிட்டுள்ள நிலையில், பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களை தற்போது இணையவழி முறை மூலம் சமர்ப்பிக்கலாம் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மேலும், குறித்த விண்ணப்பங்களை ஜூலை 10ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிவரை வரை சமர்ப்பிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இணையத்தில் சமர்ப்பிக்கின்றமையினால் தங்களுடைய விபரங்களை உரிய முறையிலும் அறிவித்தலை முழுமையாக வாசித்து விளங்கிக்கொண்டு தெளிவாக பூர்த்திசெய்து அனுப்புதல் வேண்டும் எனவும் ஆணையாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, விண்ணப்பிக்க விரும்புவோர் 'www.doenets.lk' அல்லது 'www.onlineexams.gov.lk' மூலம் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

---

# மைத்திரிபாலவின் குற்றச்சாட்டு பொய்!

## அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த கூறுகிறார்




கொழும்பு, ஜூன் 22

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை பெற்ற உதவித் தொகையில் சுமார் 500 மில்லியன் ரூபா பாதிக்கப்பட்டவர்களுக்குச் செலவிடப்பட்டுள்ளதாக கொழும்பு மறை மாவட்ட சமூக மற்றும் தொடர் பாடல் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்காக பல்வேறு தரப்பினரிடம் இருந்து பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்குக் கிடைத்த உதவித் தொகை எந்தவிதத்திலும் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை என அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியலில் மிகவும் வங்குரோத்து நிலையில் உள்ளவர் எனவும் தனது வங்குரோத்து நிலையை மறைப்பதற்காக ஊடகங்கள் இவ்வாறான பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக பல்வேறு வர்த்தக சமூகங்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் பல்வேறு தரப்பினரால் கர்தினாலுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை இதுவரை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

---

# இலங்கையிலிருந்து வெளியேறப்போகும் பெரும் எண்ணிக்கையான மருத்துவர்கள்

## எச்சரிக்கும் மருத்துவர் சங்கம்



கொழும்பு, ஜூன் 22

இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் பெரும் எண்ணிக்கையிலான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறப்போவது குறித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது

நாட்டில் உள்ள மருத்துவர்களில், 25 சதவீதம் பேர் ஏற்கனவே வெளிநாட்டில் வேலை தேடுவதற்கான முனைப்புக்களை மேற்கொண்டுள்ளனர் என்று அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில் கோவிட் தொற்றுநோயைத் தொடர்ந்து இலங்கையில் மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு முன்னர், சராசரியாக 200 மருத்துவர்கள் வேறொரு நாட்டில் பணிபுரிய இடம்பெயர்ந்தனர் என்று சுகாதார அமைச்சின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் குறிப்பாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் 1,800 க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, தற்போது அரசாங்க சுகாதார அமைப்பில் பணியாற்றும் குறைந்தது 25 சதவீதமான வைத்தியர்கள் வெளிநாடுகளில் வேலை தேடுவதற்கு தேவையான பரீட்சைகளில் ஏற்கனவே சித்தியடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எண்ணிக்கையை பொறுத்தவரையில் இலங்கையின் சுகாதாரத் துறையில் தற்போது 20ஆயிரம் மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர்.

இவர்களில் ஏறக்குறைய 5,000 இலங்கை மருத்துவர்கள் இந்தப் பரீட்சைகளை நிறைவு செய்துள்ளதாகவும் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான முடிவை எடுக்கக் காத்திருப்பதாகவும்" விஜேசிங்க கூறியுள்ளார்.

வெளியேறுபவர்களில் அதிக எண்ணிக்கையிலான நிபுணர்கள், முக்கியமாக அவசரகால மருத்துவம் மற்றும் குழந்தை மருத்துவர்கள், மனநல மருத்துவர்கள், நரம்பியல் நிபுணர்கள் மற்றும் இருதய அறுவை சிகிச்சை நிபுணர்கள் உள்ளடங்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையில், கடந்த இரண்டு ஆண்டுகளில், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அல்லது அமெரிக்கா போன்ற நாடுகளில் கட்டாயப் பயிற்சிக்காகச் சென்றவர்களும் நாட்டுக்கு திரும்பி வர விரும்பவில்லை.

இலங்கையுடன் ஒப்பிடுகையில் அந்த நாடுகளில் அவர்களுக்கு வழங்கப்படும் அதிக சம்பளமே இதற்கு பிரதான காரணமாகும்.

மத்திய கிழக்கு நாடுகளை எடுத்துக்கொண்டால், அங்கு மருத்துவர்கள், இலங்கையில் பெறும் சம்பளத்தை காட்டிலும் கிட்டத்தட்ட பத்து மடங்கு அதிகமாக சம்பளத்தை பெறுகின்றனர்.

ஐக்கிய இராச்சியம் மற்றும் அவுஸ்திரேலியாவில், இந்த சம்பளம், சுமார் 20 முதல் 30 மடங்கு அதிகமாகும் என்றும் விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org